ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

29.09.2010 - மலர் 07, இதழ் 30



## விண்வெளிச் சுற்றுலா நனவாகின்றது





## நாளைய தலைவர்களின் இன்றைய தினம் உலக சிறுவர் தினம்





## நாளைய தினத்தின் இன்றைய வழிகாட்டிகள்

## சர்வதேச முதியோர் தினம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடிபணியாத கலகக்காரர்கள்

கலகத்தை எப்படியாவது நிறுத்த வேண்டுமென ஆள்பதி தீர்மானித்தார். நீதியாகப் பிரச்சினைகளைத் தீர்க்க ஆணையாளர்கள் சிலரை கலகக்காரர்களை சந்திக்க அனுப்பி வைத்தார். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாவிட்டால் அடக்குமுறையைப் பயன்படுத்தியேனும் பிரச்சினைகளைத் தீர்க்க அனுமதி வழங்கினார். சிறிய படையணியொன்றையும் உடன் அனுப்பி வைத்தார்.

இந்த ஆணையாளர்கள் சமாதானமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தம்மால் ஆன அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டனர். எனினும், அது முடியாமல் போனது. அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால், வேறுவழியின்றி தடைவேலியை உடைத்தெறிந்து, அத்தனகல்லை பிரதேசத்தைக் கைப்பற்றினர். அப்பொழுது அங்கிருந்த மன்னனின் படைவீரர்கள் யுத்த ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு மல்வானைக்குத் தப்பி ஓடினர். ஆனால், ஒல்லாந்தர் தொடர்ந்து மல்வானையைத் தாக்கி அங்குள்ள தடைவேலிகளையும் தரைமட்டமாக்கினர்.

கலகக்காரர்கள் பின்வாங்கியபடியே ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்குரிய சொத்துக்களை அழித்தவண்ணம் கொழும்பு நோக்கிப் பயணித்தனர். இக்காலகட்டத்தில் கலகக்காரர்களை தூண்டிவிட்டது நான்கு கோரளை மற்றும் ஏழு கோறளை திசாவைகளே என்பது குறிப்பிடத்தக்கது.

இதனை அறிந்த ஒல்லாந்தர்கள் அத்தகைய திசாவைகளுக்கு லஞ்சம் வழங்கிப் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சித்தனர். கலகக்காரர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கவும் இணங்கினர். எனினும், அதனால் எவ்வித பலனும் ஏற்படவில்லை. அத்துடன், ஹாப்பிட்டிகம, சியனே, அழுத்குரு கோரளையில் உள்ள மக்களோ தாம் மன்னனின் பாதுகாப்பில் இருப்பதாக வெளிப்படுத்தினர். ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கு அதுவும் பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை:

# நாடளாவிய ரீதியில் சனுஜவும் தமிழ்மொழி மூலம் சுபதாவும் முதலாமிடம்

## மூன்று மாணவர்களுக்கு இரண்டாம் இடம்





இந்த வருடம் நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலய மாணவன் சனுஜ கல்ஹான் எதிரிசிங்ஹ, 196 புள்ளிகளுடன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தமிழ்மொழி மூலம் தோற்றியவர்களில் அம்பாறை-திருக்கோவில் கல்வி வலயத்திலுள்ள தம்பிலுவில் கலைமகள் வித்தியாலய மாணவியான மாலவன் சுபதா, 193 புள்ளிகளுடன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் மூன்றாவது இடத்தையும் இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளின்படி, 194 புள்ளிகளைப் பெற்ற மூன்று மாணவர்கள் நாடளாவிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். மினுவங்கொடை மொறகஸ்முல்ல ஆரம்பப் பாடசாலை மாணவன் நவின் யசங்க, மத்துகம மீகஹதென்ன ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த கலானி பபசரா மற்றும் காலி மஹிந்த கல்லூரியைச் சேர்ந்த எல்.லசித் நவோதியா ஆகிய மூவருமே இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளவர்களாவர்.

தமிழ்மொழிமூலம் தோற்றியவர்களில் 192 புள்ளிகளைப் பெற்று கண்டி ஸ்ரீராமகிருஷ்ண மத்திய கல்லூரி மாணவன் சுக்ரி மொஹமட் இரண்டாம் இடத்தையும் 190 புள்ளிகளைப் பெற்று, வவுனியா விபுலானந்தா வித்தியாலய மாணவன் யோகேஸ்வரன் பிரியநேசன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*படப்பிடிப்பு:*
*கித்சிறி டி மெல், யூ.எல்.மப்றூக்*
*நன்றி: தமிழ் மிரர்*

# மாணவி சுபதா மகிழ்ச்சி தெரிவிப்பு



சுபதா தனது பெற்றோருடன்

தமிழ்மொழி மூலம் முதலாவது இடத்தைப் பெற்றுள்ள மாணவியான மாலவன் சுபதா தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு;

''தமிழ்மொழி மூலம் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனது பெற்றோர், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரதும் உற்சாகப் படுத்தலிலேயே என்னால் இந்தளவிற்கு சித்தியடைய முடிந்துள்ளது. அதற்காக, அவர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன். முதலாவது (தமிழ் மொழிமூலம்) இடத்தைப் பெறுவேன் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை. இருப்பினும், ஆர்வமாகவே படித்தேன். அந்த முயற்சிக்கு உரிய பலனைப் பெற்றுள்ளேன். எனது வகுப்பு ஆசிரியர்களுக்கு நான் முதலாவது இடத்திற்கு வருவேன் என்ற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையை நிறைவேற்றியுள்ளமையும் எனக்கு மகிழ்ச்சியே''.

# 'நென குண வெடும' நிகழ்வுகள் கிளிநொச்சியில்...




ஒக்டோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினத்தை சிறப்பிக்குமுகமாக 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின்கீழ் 'நென குண வெடும சிசு திரிய' எனும் தொனிப் பொருளிலான விசேட பல்சுவை நிகழ்வுகள் கிளிநொச்சியில் காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி,முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் பங்களிப்பில் பல படைப்புக்கள் இந்நிகழ்வில் இடம்பெறும்.

சகல இனங்களையும் சேர்ந்த மாணவர்களின் கல்வி, கலாசாரம், விளையாட்டுத் திறமை வெளிப்பாடுகள், பொழுதுபோக்கு அம்சங்கள், சமயம் என பல்துறை திறமை வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் இந்நிகழ்வின் முக்கிய நோக்கம் இன ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதேயாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் நெறிப்படுத்தலின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற மேற்படி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை வட மாகாண ஆளுநர் அலுவலகம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய்
Vijey විජය
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

Ladies Indian Curta Tops Rs. 650/-
Salwar Khamiz 3Pc Sets Printed Cotton Rs. 1000/-
Casual Worked Rs. 1500/-
Rich Worked Rs. 1750/-
Denims Rs. 500/-
3/4 Pants Rs. 450/-
T-Shirts Rs. 250/-
0777 301869
Colombo 05

# 'சேகரிப்போம் சுவீகரிப்போம்' பரிசுப் போட்டி



### வெற்றி பெறுவோருக்கான பரிசுகள்

*10 பேருக்கு - பாடசாலை பேக்ஸ்* (School bags)
*15 பேருக்கு - டீ-ஷேர்ட்ஸ்* (T-Shirts)
*100 பேருக்கு - கெப்ஸ்* (Caps)
*100 பேருக்கு - டீ-மக்ஸ்* (Tea mugs)

### விதிமுறைகள்

* ஒருவர் எத்தனை தபாலட்டைகளையும் அனுப்பலாம்.
* முழுமைப்படுத்திய வரைபடத்தை தபாலட்டையில் மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
* தபாலுறையில் அனுப்புபவை நிராகரிக்கப்படும்.
* நிழற்பிரதிகள் (Photo copy) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வார பாகம் இல: 12




### நீங்கள் செய்யவேண்டியது...

இதுவரை நாம் வழங்கிய இலங்கை வரைபடத்தின் 1 தொடக்கம் 12 வரையிலான பாகங்களை தற்போது சேகரித்திருப்பீர்கள் என்று நம்புகின்றோம். இனி நீங்கள் செய்யவேண்டியது.... இலங்கை வரைபடத்தின் அமைப்பிற்கேற்ப, அவற்றை ஒட்டி வரைபடத்தை முழுமைப்படுத்துவதாகும். பின்னர் அந்த வரைபடத்தை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, இங்கு நாம் வழங்கியுள்ள கூப்பனை நிரப்பி அந்தக் கூப்பனை வெட்டி தபால் அட்டையின் மறுபுறம் ஒட்டி எமக்கு அனுப்பி வைக்கவும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி - 25.10.2010**

*பாகம் - 1 தொடக்கம் 5 வரையிலான பகுதிகளைத் தவறவிட்டவர்களுக்கு அந்த பாகங்கள் அடுத்த வாரம் பிரசுரமாகும்.*

**கூப்பன்:**

**சேகரிப்போம்-சுவீகரிப்போம்!**

பெயர் : ................................
வீட்டு முகவரி : ................................
................................
தொ.பே. இல : ................................
பாடசாலை / தரம் : ................................
: ................................

................................
பெற்றோர் கையொப்பம்/திகதி

அனுப்ப வேண்டிய முகவரி: பரிசுப்போட்டி, 'விஜய்' த.பெ.எண் 2037,கொழும்பு.

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.


10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/- பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O.BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கலாம்






## சிறுவர் உதவி தொலைபேசி சேவை

இலங்கையில் சிறுவர் உரிமை மீறல்களும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் பரவலாக இடம்பெறுகின்றபோதிலும் அவை பற்றிய தகவல்கள் சரியான அளவில் வெளிவருவதில்லை.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடன், ஓர் உதவி தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1929 என்ற இலக்கத்தை அழுத்துவதன் ஊடாக இச் சேவையுடன் தொடர்புகொள்ள முடியும். இந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவென கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது. இந்த சேவை 24 மணி நேரமும் இயங்கும், மூன்று மொழிகளிலும் முறைப்பாடுகளைச் செய்யலாம். முறைப்பாடு செய்பவரின் ரகசியத்தன்மை பாதுகாக்கப்படும். இதனால், முறைப்பாடு செய்பவருக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது.

1929 என்ற இலக்கத்தினூடாகப் பெறப்படும் முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மத்திய ஆவணப்பதிவகத்திற்கு அனுப்பப்படும். இங்கு முறைப்பாடுகளுக்கு இலக்கம் ஒன்று பெற்றுக் கொடுக்கப்படும். பின் முறைப்பாட்டின் வகையைப் பொறுத்து சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரிவுகளுக்கு அவை அனுப்பப்படும். சிறுவர் சட்டம் தொடர்பான முறைப்பாடு சட்டப்பிரிவுக்கு அனுப்பப்படும். இவ்வாறு கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகளுக்கும் தீர்வைப் பெற்றுக்கொடுக்க, சிறுவர் அதிகாரசபை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

சிறுவர் துஷ்பிரயோகம் பெரும் சமூகப் பிரச்சினையாக இருப்பது அண்மைய தசாப்த காலம் முதல் அறியப்பட்டு வருகின்றது. 1990 களில் அதிகளவு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்தன.இதனால், சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கவென, ஒரு நிறுவனத்தின் அவசியம் உணரப்பட்டது. இவை அனைத்தும் நன்கு பரிசீலித்துப் பார்க்கப்பட்டு, 1996 டிசம்பர் மாதத்தில் அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவினால் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணிக்குழு அமைக்கப்பட்டது.

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பலதரப்பட்ட பிரிவுகள்

சிறுவர்களுக்காக சிறந்த சேவைகளை வழங்கும்முகமாக, சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சில பிரதான பிரிவுகளின்கீழ் செயற்பட்டு வருகின்றது.

### சட்டப்பிரிவு

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் சிறுவர்களுக்காக சட்டரீதியில் செயற்படவென சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. இந்தப் பொறுப்பு அதிகாரசபையின் சட்டப்பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட அல்லது துஷ்பிரயோகங்களுக்குள்ளான சிறுவர்கள் பொலிஸ் நிலையத்திற்கோ, சட்ட உதவி அமைப்புக்கோ பொறுப்பளிக்கும் பணியை சட்டப்பிரிவு செய்கின்றது. துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளைக் கண்காணித்தல், தேவையெனில் சிறுவர்களுக்காக நீதிமன்றில் ஆஜராதல், சிறுவர் தொடர்பான சட்டதிட்டங்கள் பற்றி சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டல் ஆகிய நடவடிக்கைகள் சட்டப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### விசாரணைப் பிரிவு

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகள் மற்றும் தகவல்களை விசாரணைப் பிரிவு ஆராய்ந்து பார்க்கும். சர்வதேச ரீதியில் பயிற்சிபெற்ற திறமை வாய்ந்த விசாரணைக்குழு அங்கு பணியாற்றுகின்றது.

### விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் பெண்கள் செயலகமும் இணைந்து இந்தப் பிரிவினை அமைத்துள்ளன. அதிகார சபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக இந்தப் பிரிவு விசாரணைகளை நடத்தும்.

### உளவியல் சமூகப்பிரிவு

சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும்போது, உளவியல் ரீதியான தாக்கத்துக்குள்ளாகின்றனர். இந்த சிறுவர்களின் உள ஆரோக்கியத்தைப் பேணி மீண்டும் அவர்களை சமூகத்துடன் ஒன்று சேர்க்கும் பணியை உளவியல் சமூகப்பிரிவு மேற்கொள்கின்றது.

### ஊடக மற்றும் தகவல் பிரிவு

ஊடகங்கள் மற்றும் துண்டுப் பிரசுரம், சுவரொட்டி, நூல்கள், கையேடுகள் ஊடாக சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் சட்டதிட்டங்கள் பற்றி மக்களுக்கு அறிவூட்டுதல், பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்புப் பிரிவுகளை அமைத்தல் என்பன இந்தப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

### நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவு

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கவும், துஷ்பிரயோகங்களுக்குள்ளான சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்கவும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் இப்பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

### 'சுனாமி' பாதிப்புக்குள்ளான பிள்ளைகளின் நலன்புரிப் பிரிவு

சுனாமியின் காரணமாக, பெற்றோரை இழந்த பல குழந்தைகளின் பொறுப்புகள் குறித்து சிக்கல்கள் பல தோன்றின. பாதுகாப்பு அதிகாரசபையில் இந்த நலன்புரிப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் இக்குழந்தைகளின் பொறுப்புக்கள் குறித்தான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகும். இதன்படி, சுனாமியினால் பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் பொறுப்புகள் அதிகாரசபை வசமானதாகும். இக்குழந்தைகளுக்கு 21 வயது பூர்த்தியாகும்வரை அதிகாரசபை அவர்களைப் பராமரிக்கும்.

சிறுவர்களுக்கு தேவையின்றித் தண்டனை அளித்தலும், சேவைகளில் ஈடுபடுத்தலும் சிறுவர் உரிமைகளை மீறும் செயல்களாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணா, பெண்ணா?



கடல் ஆமை முட்டைகளை இட்டபின் முட்டைகளில் இருந்து வெளி வருவது ஆண் குஞ்சுகளா, பெண் குஞ்சு களா? என்பது கடல் மணலின் வெப்ப அளவினைப் பொறுத்தே தீர்மானிக்கப்படு கின்றது.



கடல் ஆமைகள் கடற்கரைக்கு வந்தே முட்டைகளை இடுகின்றன. ஆனால், அவை முட்டைகளை இடுமே தவிர, அவற்றை அடை காப்பதில்லை. முட்டைகளை இட்டு அவற்றை மணலி னால் மூடிவிட்டு மீண்டும் கடலுக்குள் சென்றுவிடும். இந்த முட்டைகள் பொரிக் கும்போது, மணலின் வெப்ப அளவைப் பொறுத்தே குஞ்சுகள் ஆணா, பெண்ணா என முடிவாகின்றன. மணலின் வெப்பநிலை 29$^{0}$C இற்குக் கூடுதலாக இருந்தால் அதிகளவு பெண் குஞ்சுகள் பிறக்கும். அதுவே, வெப்பநிலை 29$^{0}$C இலும் குறைவாக இருப்பின் அதிகளவு ஆண் குஞ்சுகள் பிறக்கும்.

# மீண்டும் உயிர்பெற்ற ஹவாய் மொழி

வட பசுபிக் சமுத்திரத்திலுள்ள ஒரு தீவுக்கூட்டம்தான் ஹவாயன் தீவு. இங்கு வாழும் மக்களின் தாய்மொழி ஹவாய் மொழியாகும். 1830-1950 வரையான காலப்பகுதிகளில் குறிப்பிட் டுக் கூறமுடியாத காரணங்களால் ஹவாய் நாட்டின் சனத்தொகை விரை வாகக் குறைந்து சென்றது. இதனால், இந்த மொழியும் அழிந்து செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனை அவதானித்த அந்நாட்டுப் பாடசாலைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உடன் செயல்பட்டு, பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கை களை மேற்கொண்டு ஹவாய் மொழியை மறுபடியும் உயிர்பெறச் செய்தன.

இம்மொழியில் a, e, i, o, u, h, k, l, m, n, p, w என மொத்தம் 12 எழுத் துக்கள் மட்டுமே உள்ளன. இந்த மொழி யில் ஒவ்வொரு வார்த்தையும் உயிரெ ழுத்திலேயே முடிவடைகின்றது.

ஆரம்பகாலத்தில் பேச்சு மொழியாக மட்டுமே இருந்து வந்த ஹவாய் மொழியில், நாளடைவில் எழுத்து நடையும் உருவாக்கப் பட்டது. பொலினேஷியன் மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்ததால் இம்மொழி, பொலினேஷியன் மொழியில் இருந்து தழுவப்பட்டுள்ளது. தற்போது இந்நாட்டில் ஆங்கிலம், ஹவாய் மொழி ஆகியன உத்தியோகபூர்வ மொழிகளாக விளங்குகின்றன.



ஹவாய் மொழி நெடுங்கணக்கு

# திராட்சையின் பரவல்



உலகில் தற்போதளவில் திராட்சைத் தோட்டங்கள் இல்லாத நாடுகளே இல்லை எனலாம். ஆனால், சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் ஒரே ஒரு நாட்டில் மட்டுமே திராட்சைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அதுதான் எகிப்து.

பின்னர், கிரேக்கர்கள் மேற்கு நாடுகளை நோக்கி படையெடுப்புகளைத் தொடர்ந்த போதுதான் திராட்சை பற்றி அவர்களுக்கு அறியக்கிடைத்தது. கிரேக்கர்களூடாக ஐரோப் பிய நாடுகளுக்கு திராட்சையின் அறிமுகம் கிடைத்தது. அவர்கள் திராட்சை விளைச்சலை தங்கள் நாடுகளில் மேற்கொண்டனர். தொடர்ந்து அது ஏனைய நாடுகளிலும் பரவத்தொடங்கியது.



# கல்வி



## முகாமைத்துவம் - 22

### கற்றலுக்கான ஆலோசனைகள்

*ஆக்கத்திறனானது அடிப்படையில் பாடசாலைப் பருவத்தி லேயே உருவாக வேண்டும். இதற்கு ஏற்றவாறு ஆக்கச் சிந்தனையை வளர்க்குமள விற்குக் கல்வி ஏற்பாடுகள் தற்போது பல வாய்ப்புக்களை உடையதாக விளங்குகின்றன.*



## ஆக்கச் சிந்தனையை வளர்த்தல்

### ஆசிரியர்கள் செய்யக்கூடியவை

அந்தவகையில், பாடசாலைகளில் மாணவர் களுக்கு ஆசிரியர்கள் வழங்கும் ஒப்படைகள் ஓரளவு ஆக்கச் சிந்தனையை வளர்க்கும் தூண் டியாக உள்ளன. இதுதவிர, மாணவர்களி டையே ஆக்கச் சிந்தனையைத் தோற்றுவிக்க ஆசிரியர்கள் மேலும் வாய்ப்புக்களை வழங்க வேண்டும். பாடசாலைகளில் கண்காட்சிகள், பொருட்காட்சிகளை நடத்துதல், ஏனைய கண்காட்சிகளைப் பார்வையிட மாணவர் களை அழைத்துச்செல்லல், அழகியற்கூடங் களை பாடசாலைகளில் நிறுவி முறையாக அழகியற் பாடங்களையும் செய்முறைகளை யும் வழங்கல், அறிவியலில் ஆக்க வேலைகள், தொழிற்சாலை ஆக்கவேலை களைப் பார்வையிடல் போன்றவற்றினூடாக, ஆக்கச் சிந்தனையை வளர்க்க ஆசிரியர்கள் உதவி செய்ய வேண்டும். இவை ஆக்கத்தை யும் உள்ளொளியையும் மாணவர்களுக்குத் தந்து, ஆக்க வேலைகளைச் செய்யத் தூண்டும்.

மேலும், மாணவர்களிடையே ஆக்கச் சிந்தனையை வளர்க்க கலைஞர்கள், விஞ்ஞானிகள் மற்றும் பல்வேறு துறைகளில் ஆக்கத்திறன்களைப் பெற்றிருப்பவர்களையும் பாடசாலைக்கு அழைத்து அவர்களுடைய அனுபவங்களைக் கூறச் செய்ய வேண்டும். அவ்வாறே, ஆசிரியர்களும் தங்களுடைய ஆக்கச் சிந்தனைகளிலும் ஆக்கச் செயல்களிலும் சுயதிறன், புதுமை ஆகியவற்றைக் காட்ட வேண்டும். அவர்களுடைய கற்பித்த லிலும் நடத்தையிலும் 'ஆக்கத் திறனை நேசித்தல்' பிரதிபலிக்க வேண்டும். இதனால் மட்டுமே மாணவர்கள் ஆக்க எண்ணங்களைப் பெற முடியும். மேலும், செயல் திட்ட முறை, கண்டறியும் முறை ஆகியவற்றினூடாக கற்பித்தல் நடவடிக்கை களை மேற்கொள்ளும்போது மாணவர்களி டையே ஆக்கத்திறன் சிறப்பாக வளரும்.

தவிர, பாடசாலைகளில் மாணவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு விடயத்தின் தலைப்பைக் கொடுத்து, அது தொடர்பான தகவல்களைச் சேகரிக்குமாறு கேட்கலாம் அல்லது குறிப் பிட்ட காலகட்டங்களில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் குறித்து தீர்வு கேட்டல், தொழிலா ளர் மத்தியில் இடம்பெறும் வேலை நிறுத்தம்




போன்ற பிரச்சினைகளைக் கொடுத்து, அவர்களின் தீர்வு தொடர்பாக பகுப்பாய்வு செய்து விளக்குதல் போன்ற பயிற்சிகளை வழங்கலாம். இதன்மூலம் மாணவர்களிடையே பகுத்தாராய்ந்து பார்க்கும் ஆற்றல் வளர்க்கப்படும்.

மாணவர்களிடம் தரவுகளை வழங்கி அதனை வகைப்படுத்துமாறு கேட்பதால் அவர்களின் ஆக்கத்திறன் உயர்நிலையை அடையும். மேலும் தங்களின் சொந்த நடவடிக்கைகள், செயற்பாடுகள் என்பவை பற்றி பகுப்பாய்வு அல்லது புலனாய்வு செய்து பார்ப்பதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் போதும் அவர்களின் ஆக்கத்திறன் வளர்க் கப்படுகின்றது.



எனவே, பாடசாலையும் வீடும் ஆக்கத் திறன் உள்ள நாளைய தலைவர்களை உருவாக்குவதில் முன்நிற்க வேண்டும். அதற்காக இன்றிலிருந்து ஆக்கபூர்வமாக சிந்தித்து, ஆக்கத்திறனை வளர்க்க நாம் ஒவ்வொருவரும் முழுமையாக முயற் சிக்க வேண்டும். (தொடரும்...)

**-எம்.ஏ.எஃப்.சப்ரானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் இயற்கை



உலகின் இயற்கை அதிசயங்களை தரையின் மேற்பரப்பில் காணப்படும் அதிசயங்கள்; நீருக்கடியில் காணப்படும் அதிசயங்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். உல்லாசப் பயணிகள், தேசசஞ்சாரிகள் சுற்றுலா நிறுவனங்கள், பல்வேறு நாடுகளின் சுற்றுலாத் துறையினர் மற்றும் அமெரிக்க நிறுவனமாகிய சி.என்.என் ஊடக வலையமைப்புகள் அனைத்தும் இணைந்து சர்வதேச ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட 19 இடங்களில் 4 இடங்களைப் பற்றி இங்கு பார்ப்போம்

## அவுஸ்திரேலியாவின் மாபெரும் பவளப்பாறை


உலகில் காணப்படும் மிகப்பெரிய பவளப்பாறை அவுஸ்திரேலியாவின் 'கிரேட் பெரியர் ரீப்' என்னும் பவளப்பாறையாகும். அவுஸ்திரேலியா நாட்டில் குவின்ஸ்லாந்தில் உள்ள 'கோரல்' கடலில் அமைந்துள்ள இது 2600 கி.மீற்றர் (1616 மைல்) நீளம் கொண்டது. அத்துடன், 900 தீவுகளைத் தொட்டுச் செல்கின்றது. இந்தப் பவளப்பாறை, 344400 சதுர கிலோமீற்றர் அதாவது, 132,974 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. ஏறக்குறைய, 3000 பாறைகளும் 900 தீவுகளும் இதனைச் சார்ந்ததாகும்.

1981 ஆம் ஆண்டு இது உலக மரபுரிமையாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. இப்பவளப்பாறையின் பெரும் பகுதி 'கிரேட் பெரியர் ரீப் சமுத்திரப்' பூங்காவிற்குச் சொந்தமானது. இப்பவளப் பாறைகள் 25 மில்லியன் வருடங்களாக உருவாகி வருவதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.


3000 தனித்தனிப் பாறைகள் சேர்ந்ததுதான் இந்தப் பெரியர் பவளப்பாறை. ஒவ்வொரு பாறையும் பல கோடிக்கணக்கான சின்னஞ்சிறு உயிர்களால் ஆனவை. பழம்பெருமை வாய்ந்த இந்தப் பாறை மூலம் பூமியின் பரிணாம வளர்ச்சியை அறியலாம். ஆண்டுதோறும் 1-5 செ.மீற்றர் அளவிற்கு இந்தப் பாறைகள் வளர்ந்துகொண்டே செல்கின்றன. இப்பவளப்பாறைகள் வளர்வதற்கு சூரிய ஒளி அவசியமாதலால் கடலின் மேற்புறத்திலும் இவை காணப்படுகின்றன.

பவளப்பாறைகளுக்கு அருகில் பல வகையான திமிங்கிலங்கள், டொல்பின்கள், போர்போய்ஸ், கடல் ஆமைகள் என்பன வாழ்கின்றன. பவளப்பாறைகளை ஒட்டியுள்ள தீவுகளில் 200 வகையான பறவைகள் காணப்படுகின்றன. இவை தவிர, கடல் பாம்புகளும் உண்டு. பவளப்பாறைகள் இருக்கும் பகுதியில் கடல் மிக அழகான நீலநிறத்தில் காணப்படும். பல வண்ணப்பாறைகள், பல வண்ணமீன்கள், சிவப்பு, நீல நிற நட்சத்திர மீன்கள், கடல் ஆமைகள் என்பனவற்றை இங்கு காணலாம்.

உடல் முழுவதும் முட்கள் நிறைந்த 'கடல் நட்சத்திரம்' என்ற பிராணிதான் பவளப்பாறையின் முக்கிய எதிரியாகக் கருதப்படுகின்றது. இப்பிராணியானது தனது முள்ளால் பாறையைக் குத்திச் சேதப்படுத்துவதன் மூலமும் தண்ணீரின் தரத்தினாலும் தட்பவெப்பநிலைகளின் மாறுபாட்டாலும் இந்தப் பாறைகள் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகின்றன.







## 'அமேசன்' மழைக்காடுகள்



தென் அமெரிக்காவின் 'அமேசன்' நதியின் நீரேந்து பிரதேசத்திலும் அதனைச் சூழவுள்ள வலயத்திலும் அமைந்துள்ள அமேசன் மழைக்காடுகள் உலகின் இயற்கை அதிசயங்கள் மத்தியில் சிறப்பான இடத்தை வகிக்கின்றன. இப்பிரதேசத்தை 'அமசோனியா' என்றும் அழைப்பர்.



இப்பூமியில் இன்று எஞ்சியுள்ள மழைக் காடுகளில் சரி பாதிக்கு மேல் இந்த அமேசன் மழைக்காடுகளே கொண்டுள்ளன. 5.5 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்புள்ள இந்த மாபெரும் வனம் 9 நாடுகளின் ஊடாகப் பரந்துள்ளது. இம்மழைக் காடுகளில் 60 சதவீதமானது பிறேசில் நாட்டுக்குச் சொந்தமானது. இம்மழைக்காடுகள் பரவியுள்ள ஏனைய நாடுகள் கொலம்பியா, பேரு, வெனிசுவெலா, ஈக்வடோர், பொலிவியா, கயானா, சூரினாம் மற்றும் பிரெஞ்ச் என்பனவாகும்.

இப்பிரதேசத்திற்கு 'அமேசன்' எனும் பெயர் வரக் காரணம் கிரேக்க வாய்மொழிக் கதைகளில் வரும் அமேசன் என்று அழைக்கப்படும் இராட்சசிகளே. இந்த இராட்சசிகள் அச்சமற்ற துணிவுமிக்க பெண் போராளிக் குழுவினராவர். இக்கதைகளின் படி, அமேசன் இராட்சசிகள் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் வாழ்ந்துள்ளனர். 1541 இல் இங்கு முதன்முதலாக வருகை தந்த ஐரோப்பியரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயங்கள்



பிரான்சிஸ்கோ டி ஒரெல்லனா (Francisco De Orellana) டெப்புயாஸ் கோத்திரத்தாருடன் மேற்கொண்ட போராட்டத்தின்பின் இப்பிரதேசம் 'அமேசன்' என பெயரிடப்பட்டது. அக்கோத்திரத்தாரின் வழக்கப்படி, அக்கோத்திரத்தைச் சார்ந்த பெண்கள் ஆண்களோடு, நேருக்கு நேர் நின்று யுத்தம் புரிந்தமையால் அவருக்கு அந்தப் பெண்கள் 'அமேசன் இராட்சசிகள்' போல் காட்சியளித்துள்ளனர். அதனால், இப்பிரதேசத்திற்கும் அதனைச் சார்ந்த காடுகளுக்கும் ஆற்றுக்கும் அமேசன் என பெயர் வந்ததாகக் கருதப்படுகின்றது.

நீரின் அளவின்படி, உலகிலேயே மிகப்பெரிய நதியாகிய அமேசன் நதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிளை நதிகளைக்கொண்ட மாபெரும் நீரேந்து பிரதேசமாகத் திகழ்கின்றது. அதனால், உலகிலேயே பாரிய உயிர்ப்பல்வகைமையைக் கொண்ட பிரதேசமும் இந்த அமேசன் மழைக் காடுகளிலேயே காணப்படுகின்றது. உலகின் சகல உயிர்ப்பல்வகைமையில் 1/3 பகுதி இந்த அமேசன் மழைக்காடுகளே கொண்டுள்ளன.

சில ஆய்வாளர்களின் கருத்தின்படி, இங்கு 1 சதுர கி.மீற்றர் பரப்புப் பிரதேசத்தில் 75,000 த்திற்கும் மேற்பட்ட மரவகைகள் காணப்படுவதாகவும் தெரிய வருகின்றது. அத்தோடு, 150,000த்திற்கும் மேற்பட்ட உயர்ரக தாவரவகைகளும் காணப்படுகின்றன. இதன்படி, புவியின் மேற்பரப்பில் மிக அதிகளவான தாவரவகைகளையும் ஏனைய உயிரின வகைகளையும் இங்கே காணலாம்.





இதுவரை இக்காடுகளில் பொருளாதார மற்றும் சமூக பெறுமதிமிக்க 438,000 த்திற்கும் அதிகமான தாவரவகைகள் காணப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், பெருந்தொகையான தாவரவகைகள் பெயரிடப்படாமலும் கண்டுபிடிக்கப்படாமலும் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த மாபெரும் வனாந்தரத்தில் பூச்சிவகைகள் 2.5 மில்லியனுக்கும் அதிகமாக வாழ்கின்றன. அதுமாத்திரமல்ல; பத்தாயிரம் வகையான தாவரங்களும் 2000 வகைக்கும் மேற்பட்ட பறவை இனங்களும் இந்த அடர்ந்த வனாந்தரத்தில் வசிக்கின்றன. 3000 வகைக்கு மேற்பட்ட மீன் இனங்களும் 1000 த்திற்கும் மேற்பட்ட ஊர்வன வகைகளும் 427 வகையான விலங்கினங்களும் நீரிலும் நிலத்திலும் வாழ்கின்றன. 378 க்கும் அதிகமான ஈரூடக வாழிகளும் இங்கு வாழ்கின்றன.

அத்துடன், உலகில் உள்ள காடுகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளே அமேசன் காடுகளுக்கும் ஏற்பட்டுள்ளன. சேனைப்பயிர்ச் செய்கைக்காக மரங்கள் அழிக்கப்படுவதால் இக்காடுகளில் 1/3 பகுதி இப்பொழுதே அழிந்துவிட்டன. எனினும், கடுமையான சட்டதிட்டங்கள் மூலம் அந்தந்த நாடுகள் அமேசன் காட்டின் அழிவை கட்டுப்படுத்தி வருகின்றன.


## 'விக்டோரியா' நீர்விழ்ச்சி

'இடியோசை எழுப்பும் புகை' எனும் பொருள்பட, 'மொசியோ ஆட்டுன்யா' என சுதேச மக்களால் அழைக்கப்பட்ட விக்டோரியா நீர்வீழ்ச்சி ஆபிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ளது. சாம்பியாவிற்கும் சிம்பாப்வேக்கும் இடையில் அமைந்துள்ள இந்த நீர்வீழ்ச்சி விக்டோரியா எனப் பெயரிடப்பட்டது. 1852 இற்கும் 1856 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இப்பிரதேசத்தில் ஆய்வில் ஈடுபட்டிருந்த ஐரோப்பியரான பிரித்தானியாவைச் சேர்ந்த டேவிட் லிவின்ஸ்டன் என்பவரே இதனை முதன்முதலாகக் கண்டுபிடித்தவராவார்.

உலகின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சிகளில் ஒன்றாகிய விக்டோரியா நீர்வீழ்ச்சி மிக அழகிய இயற்கைக் காட்சி அமைப்புகளைக்கொண்டு காணப்படுவதால் அதிக உல்லாசப் பயணிகளைக் கவர்ந்துள்ளது. உலகின் அதிஉயர் மற்றும் பெரிய நீர்வீழ்ச்சியாக இது இல்லாவிட்டாலும் 1.7 கி.மீற்றர் அகலமும் 108 மீற்றர் அதாவது, 360 அடி உயரத்தைக் கொண்டுள்ளது. அதிகளவு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் நீர்வீழ்ச்சி உலகில் இதுவேயாகும். இந்நீர்வீழ்ச்சியை 60 மீற்றர் அதாவது, 200 அடி தூரத்தில் இருந்து கண்டுகளிக்கும் வாய்ப்பானது வேறெந்த நீர்வீழ்ச்சிக்கும் இல்லாத மிகக்கிட்டிய தூரத்தில் இருந்து காணும் வாய்ப்பாகும். அத்துடன், 'சாம்பசி' எனும் நதியும் இந்த நீர்வீழ்ச்சியோடு பள்ளத்தில் பாய்வது விசேட அம்சமாகும்.

வனவிலங்குகள் மற்றும் உயிரினப் பல்வகைமைகளும் இப்பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆபிரிக்கா கண்டத்தில் ஆற்றில் வாழும் மீன் வகைகளில் அனேகமானவை இந்த ஆற்றிலேயே காணப்படுகின்றன.

முழு ஆபிரிக்க கண்டத்திலும் அதிக உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாகத் திகழும் 'விக்டோரியா நீர்வீழ்ச்சி'யானது, 'யுனெஸ்கோ' நிறுவனத்தால் உலக மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்நீர்வீழ்ச்சியின் அழகிய காட்சிகளை சம்பியா மற்றும் சிம்பாப்வே நாடுகளில் இருந்தும் கண்டுகளிக்கலாம். இவ்விரு நாடுகளும் இப்பிரதேசத்தை தேசிய வனப்பூங்காவாக பிரகடனப்படுத்திப் பாதுகாக்கின்றன.



## 'கிறேன்ட்' கெனியன்



ஐக்கிய அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் மிகவும் அழகிய நிலத்தோற்றத்தையும் சுந்தரமயமான காட்சிகளையும் கொண்ட, இயற்கை வளம் மிக்க பூமிதான் இந்த கிறேன்ட் கெனியன். இந்த மகா கெனியன் மத்தியில் 'கொலறாடோ' எனும் விசாலமான நதி பாய்ந்தோடுகின்றது. கெனியனைச் சுற்றி அமைந்துள்ள இப்பிரதேசம் 'கிரேன்ட் கெனியன்' தேசிய வனப்பூங்காவாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே ஐக்கிய அமெரிக்காவில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட வனப்பூங்கா என்றும் கூறப்படுகின்றது.

கிரேன்ட் கெனியன் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு மூலகர்த்தாவாகத் திகழ்ந்தவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான தியெடோர் ரூஸ்வெல்ட் அவர்களே! ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அவர்கள் அக்காலத்தில் அடிக்கடி இப்பிரதேசத்திற்கு வருகை தந்து இயற்கையை ரசிப்பார். அத்துடன், இங்கு வேட்டையாடுவதும் உண்டு. உலக வரலாற்றில் 2 பில்லியன் ஆண்டுகளாக 'கொலராடோ' நதியும் அதன் கிளை நதிகளும் இந்தப் பாறைத்தொடருடன்கூடிய பிரதேசத்தின் வழியாகப் பாய்ந்தோடுகின்றன. இதன் காரணமாக, இந்த அழகிய மகாகனியம் அல்லது ஆழமான ஒடுங்கிய பள்ளத்தாக்குடன்கூடிய பிரதேசமும் கொலராடோ நதிப் பள்ளத்தாக்கும் படிப்படியாக உருவாகியதாக கருதப்படுகின்றது. இது 446 கி.மீற்றர் நீளமும் (274 மைல்) 6.4 கி.மீற்றர் முதல் 24 கி.மீற்றர் வரை அகலமும் கொண்டது. சில இடங்களில் 1.6 கி.மீற்றர் ஆழமும் காணப்படுகின்றது.

மிகத்தொன்மையான காலத்தில் பூர்வீக சுதேச அமெரிக்கர்கள் இங்கு வாழ்ந்ததாக சான்றுகள் தெரிவிக்கின்றன. ஸ்பானியரான காஷியா லோபெஸ் தி காடெனாஸ் எனும் ஐரோப்பியரே 1540 இல் முதன்முதலாக இதனைக் கண்டுபிடித்தார். எனவும் அறியவருகின்றது.

அமெரிக்க சிவில் யுத்தம் வரை இது அவ்வளவு பிரசித்தி பெறவில்லை. யுத்தத்தில் ஒரு கையை இழந்த மேஜர் ஜெனரல் ஜோன் வெஸ்லி பவெல் எனும் வீரர் இதுகுறித்து விசேட கவனம் செலுத்தினார். 1869 இல் மகாகனியம் வழியாக பாயும் 'கொலராடோ' நதி ஊடாக பயணம் செய்யத் தீர்மானித்தார். அவருடன், 9 பேர் 4 ஓடங்களில் பயணத்தை ஆரம்பித்தனர். பாய்ந்தோடும் 'கொலராடோ' நதி ஊடாகப் பயணிப்பது மிகுந்த ஆபத்தானது. இறுதியில் பயணத்தை முடித்தவர்கள் 9 பேரில் 6 பேர் மாத்திரமே. இக்கனியம் வழியாகப் பயணித்த முதல் நபராகக் கருதப்படுபவர் மேஜர் ஜெனரல் ஜோன் வெஸ்லி பவெல் அவர்களே.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெனின் பல்கலைக்கழக நுழைவாயில்


பெனின் மக்களவை



போர்டோ நோவோ நகரின் தோற்றம்

# பெனின்

**அரசு:** ஒரு சட்ட சபைகொண்ட பல கட்சிக் குடியரசு.
**சுதந்திரம்:** பிரான்ஸிடமிருந்து, 1960 ஓகஸ்ட் முதலாம் திகதி.
**தேசிய பெயர்:** ரிபப்ளிக் டு பெனின் (Republic of Benin).
**தேசிய விடுமுறை தினம்:** தேசிய தினம் ஓகஸ்ட் 1.
**அதிபர்** (2006): யாயி போனி.

## புவியியல்

கினியா வளைகுடாவில் அமைந்துள்ள ஒரு மேற்காபிரிக்க நாடு. **மேற்கு:** டோகோ; **கிழக்கு:** நைஜீரியா; **வடக்கு:** புர்கினா ஃபெஸோ மற்றும் நைகர் ஆகிய நாடுகள் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. ஒடுங்கிய கரையோரப் பகுதிகளைக்கொண்ட இந்நாட்டின், வட பகுதியில் அடர்ந்த காடுகளும் மேட்டுநிலங்களும் உயர் மலைகளும் காணப்படுகின்றன. தெற்கே சதுப்பு நிலங்களும் களப்புகளும் காணப்படுகின்றன. 'லா டெரி டி பெரே' மேட்டுநிலம், 'அட்டகோரா' மலைகள் என்பன முக்கிய நிலவுருவங்களாகும். நைகர் மற்றும் கியூமே என்பன இங்குள்ள முக்கிய ஆறுகளாகும்.

**மொத்தப்பரப்பு:** 43,483 ச.மைல் (112,620 ச.கி.மீ);
**மொத்த நிலப்பரப்பு:** 42,710 ச.மைல் (110,619ச.கி.மீற்றர்).
**தலைநகரம்** (உத்தியோகபூர்வ): போர்டோ-நோவோ.
**பெரிய நகரமும் அரசுத் தலைமையகமும்:** கொடோனோ.
**ஏனைய பெரிய நகரங்கள்:** பராகு, ஜோகு.
**உயர் மலைச்சிகரம்:** சொக்பாரோ மலை (658 மீற்றர்);
**தாழ் மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம்.
**நிலப்பிரிவுகள்:** 12 திணைக்களங்கள்.
**சனத்தொகை** (2010): 9,056,010. **நாணயம்:** CFA ஃபிரேங்.
**மொழிகள்:** பிரெஞ்ச் (உத்தியோகபூர்வமொழி), ஃபொன், யொரூபா, ஏனைய உள்ளூர் மொழிகள்.
**இனக்குழுக்கள்:** ஆபிரிக்கர் 99% (42 இனக்குழுக்கள்), ஐரோப்பியர் சுமார் 5500 பேர் மாத்திரமே.
**சமயங்கள்:** உள்ளூர் மதநம்பிக்கைகள் 50%, கிறிஸ்தவம் 30%, இஸ்லாம் 20%.
**எழுத்தறிவு** (2006): 34.7%. **இணையத்தளக் குறியீடு:** .bj
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 229



தேசிய இலச்சினை


டாடா சொம்பா வீடுகள்

**தேசிய கீதம்**

Jadis a son appel, nos aieux sans faiblesse
Ont su avec courage, ardeur, pleins d'allegresse
Livrer au prix du sang des combats eclatants.
Accourez vous aussi, batisseurs du present,....என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

16 ஆம் நூற்றாண்டில் ஆதிக்கம் பெற்றிருந்த டஹோமி எனும் மேற்காபிரிக்க அரசின் இருப்பிடம் இதுவே. 1872 இல் பிரான்ஸ் இந்நாட்டை ஆக்கிரமித்து தனது காலனியாக்கியது. 1960 ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி பெனின் குடியரசாக சுதந்திரம் பெற்றது. இதனையடுத்து ராணுவ அரசுகளின் ஆதிக்கம் நிலவியதோடு,1972 இல் மத்தேயு கெரேகௌ எழுச்சியுடன் அது முடிவுக்கு வந்தது. 2006 தேர்தலில் யாயி போனி அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.










ஜனாதிபதி

## கலாசாரம்

பல்வேறு வகையான உணவு வகைகளை உட்கொள்வர். கோழி இறைச்சி, மீன், மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி என்பன அவற்றுள் அடங்கும். இவைதவிர; அரிசி, வற்றாளை, மரவள்ளி, உருளைக்கிழங்கு என்பவற்றையும் விரும்பி உண்பர். பாரம்பரிய இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. உதைபந்தாட்டமும் டெனிஸ் விளையாட்டும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. பெனின் மக்கள் தொகையில் 50% மானோர் ஆபிரிக்காவின் உள்நாட்டு மதமாகிய 'வூடு' சமயத்தவர்களே. 'வூடு' என்றால் 'மர்மம் நிறைந்தது' என்று பொருள்.தலைமுறை தலைமுறைகளாகப் பின்பற்றப்பட்டு வரும் நம்பிக்கைகளும் ஆசார, அனுஷ்டானங்களும் ஒன்றிணைந்த ஒரு வழிபாட்டு வடிவமே வூடு.

## காலநிலை

பொதுவாக, வெப்பமான காலநிலை நிலவும் ஒரு நாடு. வெப்பமும் ஈரழிப்பும் கலந்த காலநிலை தெற்கில் நிலவுகின்றது. வடக்கில் மிதமான காலநிலை நிலவுகின்றது. நொவெம்பர் முதல் ஏப்ரல் வரை பொதுவாக உலர் காலநிலை நிலவும். ஏப்ரல் மாதம் இறுதியில் ஆரம்பிக்கும் மழைப்பருவம் செப்டெம்பர் வரை நீடிக்கும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2003): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 66,500; கையடக்கத் தொலைபேசிகள்: 236,200.



**வானொலி நிலையங்கள்** (2000): AM 2, FM 9, SW 4. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 1. **இணையத்தள வழங்குனர்கள்** (2004): 879; இணையத்தளப் பாவனையாளர்கள்: 70,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்:** மொத்த நீளம் 578 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2000): 6787 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 1357 கி.மீற்றர். செப்பனிடப்படாதவை 5430 கி.மீற்றர்). **நீர்வழிப் போக்குவரத்து** (2004): 150 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** கொடோனோ.
**விமான நிலையங்கள்:** 5.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 25.53) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பருத்தி, மரவள்ளி, அவரை வகைகள், பாம் எண்ணெய், தானியங்கள், கால்நடைகள். **கைத்தொழில்கள்:** புடவை, கட்டடப் பொருட்கள், சீமெந்து. **இயற்கை வளங்கள்:** சிறிய அளவில் எண்ணெய் வளம், சுண்ணக்கல், பளிங்கு, விலைமதிப்புள்ள மரங்கள். **ஏற்றுமதிகள்** (2009): பருத்தி, மசகு எண்ணெய், பாம் உற்பத்திகள், கொக்கோ. **இறக்குமதிகள்** (2009): உணவுற்பத்திப் பொருட்கள், மூலப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): சீனா, இந்தியா, கானா, நைகர், இந்தோனேஷியா, நைஜீரியா, பிரான்ஸ், தாய்லாந்து, கோட் டி ஐவரி.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

✱ போர்டோ நோவோ வரலாற்றியல் நூதனசாலை ✱ டனோகு நீர்வீழ்ச்சிகள் ✱ கோடா நீர்வீழ்ச்சிகள் ✱ க்ரேண்ட்-போபோ கடற்கரை ✱ எபோமி ராஜ மாளிகைகள் ✱ ஹிப்போ-ஸ்பொடிங் நீரியல் பூங்கா ✱டாடா சொம்பா வீடுகள் (பாரம்பரிய ஆதிகால வீடுகள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்கு வழிகாட்டும் ஜப்பானின் S ஐந்து கொள்கை






ஜப்பானில் நீண்ட காலமாகப் பாவனையிலுள்ள, ஜப்பானியராலேயே அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது தாய்வான், மலேசியா, கொரியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளிளெல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள. S ஐந்து எனப்படும் ஐந்தம்சத்திட்டம் குறிப்பாக ஆசிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குப் பாரிய பங்களிப்புச் செய்துவருகின்றது.



இந்த ஐந்தம்சக் கொள்கையின் பங்களிப்பானது பாடசாலைகள், காரியாலயங்கள், இல்லங்கள், வகுப்பறைகள், படிக்கும் அறைகள் மற்றும் சுற்றுச் சூழல் என அனைத்து இடங்களிலும் இலகுவாகச் செயல்படுத்தக்கூடிய ஒன்றாகும்.

Seiri (Sort-வகைப்படுத்து), Seiton (Set -சீராக்கு), Seiso (Shine-மெருகூட்டு), Seiketsu (Standdardise-உரிய நிலைப்படுத்து), Shitusuke (Sustain-தாங்கிநில்) என்ற ஐந்து அம்சங்களே அவையாகும்.



முதலாவது, S வகைப்படுத்துவதாகும். அவசியமற்றவற்றைத் தேர்ந்தெடுத்து அகற்றிவிட்டு, பிரயோசனப்படுவனவற்றை மாத்திரம் தன்னகத்தே வைத்துக்கொள்வதாகும். அனேகமாக, இல்லங்களில், அறைகளில், பாடசாலைகளில், வகுப்பறைகளில், காரியாலயங்களில் ஏன் எமது வீட்டுச் சுற்றுச்சூழலில் எமக்குத் தேவைப்படாதவை எவ்வளவு தேங்கிக் காணப்படுகின்றன என்பதை நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால், நாம் எவ்வளவு தூரத்திற்கு அவசியமற்றவைகளைத் தேக்கி வைத்துள்ளோம் என்பது புரியும்.




இரண்டாவது, S சீராக்குவதாகும். அவசியமற்றவைகளை அகற்றியபின்னர், பிரயோசனப்படுவனவற்றை உரிய முறையில் சீராக்கி வைப்பதே இதன் பொருளாகும். அந்தந்தப் பொருட்களை அதற்குரிய இடங்களில் வைத்திருப்பதும் மிக எளிதாக எடுக்கக்கூடிய முறையில் அவற்றை வைத்திருப்பதும் ஒன்றைத் தேடிக்கண்டுபிடிப்பதில் உள்ள நேரத்தை மீதப்படுத்திக்கொள்ள முடிவதோடு, தேடுவதில் உள்ள கஷ்டத்தையும் களைப்பையும் இல்லாமலாக்கிக் கொள்ளமுடியும்.

மூன்றாவது, S மெருகூட்டுவதாகும். பொருட்கள் அனைத்தையும் சுத்தமாக, அலங்காரமாக வைத்திருப்பதே இதன் பொருளாகும். பாடசாலைகள், வகுப்பறைகள், காரியாலயங்கள், இல்லங்கள், இவற்றைச் சுற்றியுள்ள சுற்றாடல் என்பவற்றை பரிசுத்தமாக வைத்திருப்பதால், நமது உள்ளங்களும் பரிசுத்தமடையும் என்பதில் ஐயமில்லை.

நான்காவது, S உரிய நிலைப்படுத்தலாகும். நமது பாடசாலைகளில், காரியாலயங்களில், வீடுகளில் உள்ள அனைவரும் உரிய நிலைப்படுத்தலின் அவசியத்தை உணர்வதோடு, அவற்றை செயல்படுத்துவதில் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமையை உணர்த்தல். ஐந்தாவது அம்சமாகத் தாங்கி நிற்பதைக் கொள்ளலாம்.

ஜப்பான் இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது நாகசாகி, ஹிரோஷிமா தாக்கப்பட்டு உயிர், உடைமைகள் அனைத்தையும் இழந்த பின்னரும்கூட தேசிய உற்பத்தித்திறனை மேம்படச் செய்து கொள்வதற்கு இந்த ஐந்து அம்சத்திட்டமே முக்கிய காரணமாக இருந்துள்ளது. அதனாலேயே மேற்குறித்த ஆசிய நாடுகளிலெல்லாம் 'S ஐந்து' எனப்படும் ஐந்தம்சத் திட்டமானது துரிதகெதியில் அறிமுகமாகி, செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

-செம்மைத்துளியான்



## தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## தொழிற்தொடர்பு, மனிதவள அமைச்சு

NPS SRI LANKA

## விஜய் உற்பத்தித்திறன் ஓவியப் போட்டி - 2010

### வினைத்திறனை வீட்டிலிருந்து ஆரம்பிப்போம்

அரச நிறுவனமாகிய தேசிய உற்பத்தித்திறன் நிறுவனமானது இம்முறையும் 2010 ஆம் ஆண்டிற்கான சித்திரப் போட்டியை நடத்துகின்றது.

**'வினைத்திறனை வீட்டிலிருந்தே ஆரம்பிப்போம்'** என்ற தலைப்பிலேயே இந்த சுவரொட்டி (போஸ்டர்) சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. நமது வீட்டில் வினைத்திறனை ஒழுங்காக கடைப்பிடித்தால்தான் நமது பாடசாலை, காரியாலயம் சமூகம் நாடு போன்றவற்றையும் வினைத்திறன் மிக்கதாக ஆக்கமுடியும். எனவே, வீட்டில் வினைத்திறனை மேற்கொண்டால் அது நாட்டின் மேம்பாட்டிற்கும் பயன்மிக்கதாக அமையும்.

எனவே, கீழ் காணப்படும் அம்சங்களைக் கவனத்தில் கொண்டு உங்களுடைய சுவரொட்டி சித்திரத்தை வரையமுடியும்.

1. வீட்டுத்தோட்டம் வினைத்திறன் மிக்க இடமாக எடுத்துக்காட்டி சித்திரம் வரையலாம்.
2. உங்களுடைய வீட்டை முறையாக அமைத்து இருக்கின்ற இட வசதிக்குள் கூடிய பயனைப் பெறுவதைக் காட்டும் சித்திரமாக அமையலாம்.
3. வீட்டின் பாதுகாப்பை எடுத்துக்காட்டும் விதமான சித்திரம்.
4. வீட்டின் அவசியமற்றவற்றை அப்புறப்படுதலும் அவசியமானவற்றை ஒழுங்குபடுத்தி சீராக வைத்தல்.
5. வீடானது சுத்தமும் சுகாதாரமும் மிக்கதாக இருப்பதான உணர்வை ஏற்படுத்தும் விதமான சித்திரம்.
6. வீட்டில் பொருளாதார ஸ்தீர நிலையானது, உயர்ந்த பழக்கவழக்கங்களை ஏற்படுத்தும் என்பதை விளக்குதல்.
7. வாழ்க்கையை இயல்பான தன்மை மிக்கதாக எடுத்துக்கொள்ளத்தக்க வழிமுறைகளை காட்டும் சித்திரங்கள்.
8. வீட்டில் நிதி கையாளுகை மற்றும் சிக்கனத்தை உணர்த்தும் சித்திரங்கள்.
9. நமது கலாசாரத்தைப் பாதுகாப்பதை உணர்த்தும் சித்திரங்கள்.

**இப்போட்டி 5 பிரிவுகளாக நடத்தப்படும்**

1. பாடசாலை மட்டம் - தரம் 1 தொடக்கம் 5 வரை
2. பாடசாலை மட்டம் - தரம் 6 தொடக்கம் 11வரை
3. பாடசாலை மட்டம் - தரம் 12 தொடக்கம் 13 வரை
4. பல்கலைக்கழக மட்டம் - பல்கலைக்கழக மாணவர்கள்
5. பகிரங்க மட்டம் - இலங்கையர் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**ஓவியத்தின் அளவு**

அளவு - 18x24 அங்குலம்

'பிரிஸ்டல் போர்ட்' அல்லது ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தும் அட்டைகள், தாள்கள் எதையாவது பயன்படுத்தலாம்.

மொழி - தமிழ், சிங்களம், ஆங்கிலம்

**பரிசு விபரம்**

**பாடசாலை பிரிவு 1 மற்றும் 2**

1 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்

**பாடசாலை பிரிவு 3**

1 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்

**பல்கலைக்கழக மட்டம்/பகிரங்க மட்டம்**

1 ஆவது பரிசு - ரூபா 30,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட வெற்றியாளர்களுக்கு மட்டுமன்றி தேர்வு செய்யப்படுகின்ற ஏனைய ஓவியங்களுக்கும் திறமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது ஓவியங்களை உங்கள் பகுதிக்குரிய பிரதேச செயலகத்தின் தொழிற்தொடர்பு மற்றும் மனித வள அமைச்சின் உதவியாளரிடமும் கையளிக்கலாம்.

**போட்டி விதிமுறைகள்**

1. அனுப்பப்படுகின்ற ஓவியம் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம். ஆனால், ஒன்றுக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஓவியங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.
5. சகல பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
6. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தம்மை உறுதி செய்தல் வேண்டும்.
7. போட்டியாளர்கள் தமது ஓவியத்தின் பின்புறத்தில் இங்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கூப்பனை ஒத்த கூப்பன் ஒன்றினைத் தயாரித்து நிரப்பி ஒட்டுதல் வேண்டும்.
8. போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் அனைத்தும் நடுவர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதித் தீர்ப்பாகும். வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் கொழும்பில் வைத்து வழங்கப்படும்.
9. நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஓவியங்கள் மற்றும் இவற்றை பிரசுரிக்கும் உரிமையோ, தேவை கருதி அவற்றைப் பயன்படுத்தும் உரிமையோ தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்கே உரித்துடையதாகும்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. i. மாவட்டம் ....................
   போட்டிப் பிரிவு ....................
2. i. முதல் பெயர் .................... (ஆங்கில தனியெழுத்தில்)
   ii. முழுப் பெயர் ....................
3. i. முகவரி .................... (ஆங்கில தனியெழுத்தில்)
   ....................
   ....................
   ii. தொலைபேசி ....................
4. வயது ....................
5. i. பாடசாலையின் பெயர்/முகவரி
   ....................
   ....................
   ii. வகுப்பு (தரம்) ....................
6. பல்கலைக்கழக மாணவர்களாயின்
   i. பல்கலைக்கழகத்தின் பெயர்
   ....................
   ii. கல்வி கற்கும் பிரிவு (பீடம்)
   ....................

....................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் முற்றிலும் உண்மையானவையே என உறுதிப்படுத்துகின்றேன்.**

....................
பாடசாலை அதிபர்/பீடாதிபதி
(கையொப்பம்/றப்பர் முத்திரை)

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2010.10.15**
**அனுப்ப வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்,**
**தேசிய உற்பத்தித்திறன் செயலகம்,**
**இல 318, ஹைலெவல் வீதி, கொழும்பு-06.**

ஊடக அனுசரணை: விஜய் விජය

பரிசு அனுசரணை: O-KAY

மேலதிக விபரங்களுக்கு:- தொலைபேசி 011-2812163/6, ஃபெக்ஸ்: 011- 2812162, மின்னஞ்சல் - nposl@nps.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II (சென்ற வாரத்தொடர்ச்சி.....)

பெயர்: ........................................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

34. நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை எது?
    (i) SOS (ii) ISO (iii) SLS (iv) ISBN

35. பித்தளைப் பாத்திரங்களை துப்பரவாக்கி மினுக்குவதற்குப் பயன்படுத்தும் பொருள் எது?
    (i) தேங்காய்ப்பூ (ii) சுட்ட உமி (iii) பழப்புளி (iv) விம்

36. மயக்கமடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்யக்கூடியது;
    (i) நோயாளிக்கு நீர் பருக்குவதற்கு முயற்சித்தல்
    (ii) நோயாளிக்கு நன்கு சுவாசிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்
    (iii) கை மருந்து போடுதல்
    (iv) நோயாளியைச் சுற்றி மாணவர்கள் கூட்டமாக நிற்றல்


37. வட்டத்தினுள்ளே காணப்படும் இலக்கங்களை மட்டும் பயன்படுத்தி விடை தருக.
    2 0
    7 8
    (i) ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்குறி யாது? ..................................
    (ii) ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்குறி யாது? ..................................


38. எண் 9435 இல்;
    (i) இலக்கம் 4 குறிக்கும் இடப்பெறுமானம் யாது? ..................................
    (ii) இலக்கம் 9 குறிக்கும் பெறுமானம் யாது? ..................................

39. 2639 உடன் 709 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது? ..................................

40. 9006 இலிருந்து 450 ஐக் கழிக்க வரும் வித்தியாசம் யாது? ..................................

41. 
    நிறந்தீட்டாத பகுதியை பின்னமாக எழுதுக.
    ..................................


42. 
    இவ்வுரு ஒரு சமபக்க முக்கோணி ஆகும்.
    இதன் சமச்சீர் கோடுகளை வரைக.


43. 

    பென்சிலின் நீளம் யாது? ..................................

44. ஒரு பிள்ளைக்கு 4 புத்தகங்கள் வீதம் 206 பிள்ளைகளுக்கு கொடுப்பதற்குத் தேவையான புத்தகங்களின் எண்ணிக்கையைக் காண்க. ..................................

45. 612 தோடம்பழங்கள் மூன்று பெட்டிகளில் சமனாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது? ..................................

46. 
    இவ்வுரு ஒரு சதுரமுகி. அதன்,
    (i) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..................................
    (ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..................................

47. 
    இவ்வுருவின் பரப்பளவு எத்தனை கட்டங்கள்?
    ..................................




★ வெற்றிடங்களில் வரவேண்டிய பெறுமதிகளை எழுதி அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | பொருட்கள் | பொருட்களின் விலை | கொடுத்த பணம் | மீதிப் பணம் |
|---|---|---|---|---|
| | பேனா | ரூபாய் 14.50 | ரூபாய் 20.00 | ரூபாய் 5.50 |
| 48. | பென்சில் | ரூபாய் 5.50 | ரூபாய் 10.00 | ரூபாய் ........... |
| 49. | அடிமட்டம் | ரூபாய் 35.00 | ரூபாய் ............ | ரூபாய் 5.00 |
| 50. | பயிற்சிப் புத்தகம் | ரூபாய் ............. | ரூபாய் 50.00 | ரூபாய் 15.00 |

★ பின்வரும் படத்தை அவதானித்து நிகழ்வை ஆறு வாக்கியங்களில் நிகழ்காலத்தில் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தபட்சம் ஐந்து சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக இருக்க வேண்டும்.



1. ..................................................................
   ..................................................................
2. ..................................................................
   ..................................................................
3. ..................................................................
   ..................................................................
4. ..................................................................
   ..................................................................
5. ..................................................................
   ..................................................................
6. ..................................................................
   ..................................................................

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

## சுற்றாடல்

பெயர்: ........................................................ நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

01. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.
    1. தொட்டாற் சிணுங்கி ஒரு கொத்துப் பூவாகும். (..............)
    2. பாதணியின் அடிப்பகுதி ஒரு பக்கமாகத் தேய்ந்திருப்பவர்கள் அடி வைக்கும் கொண்ணிலையில் தவறு இருக்க முடியும். (..............)
    3. முள் முருக்கம் பூ எல்லாக் காலத்திலும் பூக்கும். (..............)
    4. இலங்கையின் தேசிய பறவை காட்டுக்கோழி. (..............)
    5. மரக்கறி வகைகளையும் கீரை வகைகளையும் கூடியளவு நேரம் சமைப்பதனால் போசாக்குத் தன்மைகள் குறைவடையும். (..............)

02. A பகுதிக்குப் பொருத்தமானதை B இலிருந்து தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. ஓரிதழ் பூ | ( 4 ) | 1. காகம் |
| 2. தச்சன் | (..............) | 2. நீர்மட்டம் |
| 3. ஈருடக வாழி | (..............) | 3. நத்தை |
| 4. மேசன் | (..............) | 4. அந்தூரியம் |
| 5. அனைத்தும் உண்ணி | (..............) | 5. சீவுளி |
| 6. மெதுவாக நகரும் | (..............) | 6. தவளை |

03. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளிகளில் எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| நாகமலர் | பொன் அவரை | வண்ணத்துப்பூச்சி | நத்தை | கொண்ணிலையில் |

1. மகரந்தச் சேர்க்கைக்கு .................................... உதவுகின்றது.
2. மருந்தாகப் பயன்படுத்தும் பூ ....................................
3. .................................... நான்கு இதழ்களைக் கொண்டது.
4. சரியான .................................... நின்று தேசிய கீதத்தைப் பாடுதல்.
5. எதிரிகளிடமிருந்து தப்புவதற்காக .................................... தமது ஓட்டுக்குள் உடலை மறைத்துக்கொள்ளும்.

04. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.
    1. இரவில் இலைகளைச் சுருட்டிக்கொள்ளும் தாவரம் எது?
       1. செவ்வரத்தை 2. அகத்தி 3. பலா
    2. வெளவால் நாடி வரும் பூ எது?
       1. வாழை 2. மல்லிகை 3. தூரியான்
    3. எல்லாக் காலத்திலும் பூக்கும் பூ எது?
       1. லில்லிப் பூ 2. மாம்பூ 3. முள்முருக்கம் பூ
    4. பூக்காத தாவரம் எது?
       1. பப்பாசி 2. நத்தார் மரம் 3. இலுப்பை

05. வானில் உயரப் பறக்கும் பறவை எது?
    1.  2.  3. 


06. இரவில் உணவு தேடும் பிராணி எது?
    1. ஆந்தை 2. மயில் 3. கோழி

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்டெம்பர் 28:

# உலக விசர் நாய்க்கடி தினம்


விசர் நாய்க்கடிக்கு ஆளான நோயாளி


ரேபிஸ் வைரஸ் தொற்றுக்குள்ளான நாயொன்று




விசர் நாய்க்கடி (Rabies) என்பது ஒரு கொடிய நோயாகும். விசர் நாய் கடிப்பதால் நாயின் உமிழ்நீர் மூலமாக 'ரேபிஸ்' வைரஸ்கள் உடலில் தொற்றுவதாலேயே இந்த நோய் ஏற்படுகின்றது. மனிதர்களுக்குப் பெரும்பாலும் விசர் நாய்க்கடியினாலேயே இந்த நோய் ஏற்படுகின்றது. தவிர; வௌவால், ஓநாய், நரி, குரங்கு போன்ற விலங்குகளூடாகவும் ரேபிஸ் நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ரேபிஸ் வைரஸ் மனிதனின் மூளையைப் பாதிக்கும் தன்மை கொண்டது. மனிதனுக்குள் இந்த வைரஸ் உட்புகுந்து, மத்திய நரம்பு மண்டலத்தை சென்றடைந்த பின்னரே, ஒருவரில் ரேபிஸ் நோய்க்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கும்.

### அறிகுறிகள் சில...

உடல் சோர்வு, தலைவலி, காய்ச்சல் (இவை ஆரம்ப அறிகுறிகளாகும்). இதனைத் தொடர்ந்து கடிபட்ட இடத்தில் தாங்கமுடியாத வலி, வெறித்தனமான செயற்பாடுகள், மனச்சோர்வு, ஜலபீதி (நீரைக்கண்டு பயம்) என்பன படிப்படியான அறிகுறிகளாகத் தென்படும். இந்நோய்க்கு ஆளானவர்கள் உணவில் விருப்பின்றிக் காணப்படுவதுடன், நாளடைவில் பேச்சு வராமல் நாய் குரைப்பதுபோல ஒலியை வெளிப்படுத்தவும் தொடங்குவர். இது ஒரு தொற்றுநோயாக இனங் காணப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர் தனிமைப்படுத்தப்படல் வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. முறையான அவசர சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் நோய்த்தாக்கத்திற்கு உள்ளானவர் இறந்துவிடும் அபாயநிலை காணப்படுகின்றது.

### உலக விசர் நாய்க்கடி தினம்


ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி 'உலக விசர் நாய்க்கடி தினம்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தினத்தில் உலகளாவிய ரீதியில் விசர் நாய்க்கடி குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுவதோடு, விசர் நாய்க்கடிக்கு ஆளாவதைத் தவிர்த்திருப்பதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

### மரணமும் தடுப்பு மருந்தும்

1885 ஆம் ஆண்டு லுயிஸ் பெஸ்ச்சர் மற்றும் எமிலி ரக்ஸ் ஆகியோர் விசர் நாய்க்கடி நோய்க்கான தடுப்பு மருந்தினைக் கண்டறியும் வரை விசர் நாய்க்கடிக்கு ஆளானவர்கள் மரணத்தைத் தழுவியே வந்தனர்.

உலகளவில் 10 நிமிடத்துக்கு ஒருவர் என்ற விகிதத்திலும் ஆண்டுதோறும் சுமார் 52,500 பேர் என்ற ரீதியிலும் விசர் நாய்க்கடியினால் உயிரிழப்பதாக கணக்கெடுப்பொன்று தெரிவித்துள்ளது. எனவே, இதற்குத் தீர்வு காணும் முயற்சியில் தொடர்ந்தும் ஆய்வுகள் நடந்து வருகின்றன. தற்போது, 'நெஷனல் சயன்ஸ் எகடமி' இதற்கான தடுப்பு மருந்தொன்றைக் கண்டறிந்துள்ளது. இந்த மருந்து, ரேபிஸ் வைரஸுடன் தொடர்ந்து போராடி-அதனை அழித்து-எதிர்ப்புத் தன்மையை மூளையில் நிலைநிறுத்தும் இயல்பினைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.







ரேபிஸ் வைரஸ்

---


'சைக்கிளில் தொழிலுக்குச் செல்லும் தினம்' அன்று ஐக்கிய அமெரிக்காவின் ஃபிலடெல்ஃபியா நகர மேயர் நண்பர்களுடன் சைக்கிள் ஓட்டும் காட்சி


சைக்கிளில் தொழிலுக்குச் செல்வோர்



# நாமும் சைக்கிள் ஓட்டுவோம்

**அண்மையில் பிரித்தானியாவில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பொன்றின்படி; நடந்தோ, பஸ், கார், வேன் போன்றவற்றிலோ பாடசாலைக்குச் செல்கிற மாணவர்களைவிட, சைக்கிளில் செல்கிறவர்களின் ஆரோக்கியம் 30% கூடுதலாக இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.**

பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் இந்த சதவீதம் இன்னும் அதிகமாம். பெரும்பாலும் பருவமெய்தும் வயதில் உண்டாகின்ற உடல் பருமனைக் குறைத்து, அவர்களை சரியான எடை மற்றும் வடிவத்தில் இருக்க இந்த சைக்கிள் மிதிப்பு (Cycling) வழிவகுக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வயதும் வசதியும் கூடக் கூட சைக்கிள் ஓட்டுவதை அந்தஸ்துக் குறைவான ஒரு விடயமாக நம்மில் பலர் தவறாகக் கருதுகின்றனர். ஆனால், இது மாரடைப்புக்குப் பிரதான காரணமான குருதிக்குழாய் அடைப்புகள் வராமல் தடுத்து, இதய ஆரோக்கியத்தைக் காக்கிறது எனக் கூறப்படுகின்றது.

உடற் பருமனால் பாதிக்கப்பட்டோருக்கு ஊளைச்சதைகளைக் குறைத்து, உடல் எடையைக் கட்டுப்பாட்டில் வைக்கவும் நீரிழிவையும் குருதி அழுத்தத்தையும் கட்டுப்பாட்டில் வைக்கவும் சைக்கிள் ஓட்டுவது உதவுகின்றது.

அத்துடன், சுவாசக் கோளாறுகளைப் போக்கி, நாள் முழுவதும் சுறுசுறுப்பாக வைக்கிறது. மேலும், பல்வேறு நோய்களும் நம்மைத் தீண்டாமல் உடல் ஆரோக்கியத்தைக் காக்க வழிசெய்யும் மருந்தாக சைக்கிள் ஓட்டுவது விளங்குகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் சைக்கிள் ஓட்டுவதை ஊக்கப்படுத்தும் வகையில் 'கம்யூனிட்டி சைக்கிள் திட்டங்கள்' அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன்படி பஸ், கார் போன்ற வாகனப் பயணங்களைத் தவிர்த்து, ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குச் செல்ல மக்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன. இந்த சைக்கிள் திட்டத்தின் மூலம் சுற்றுச்சூழல் மாசடைவது குறைவதும் போக்குவரத்து நெரிசல்கள் கட்டுப்படுத்தப்படுவதும் மக்களின் ஆரோக்கியம் அதிகரிப்பதும் முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

### சைக்கிள் ஓட்டுவதை பெருமைப்படுத்தும் நாடுகள்

* 'உலகின் சைக்கிள் நகரம்' என்று கூறும் அளவுக்கு நெதர்லாந்தில் சைக்கிள் போக்குவரத்து அதிகரித்திருக்கின்றது.
* வருடத்துக்கொரு முறை 'சைக்கிள் வாரம்' என்றொரு வாரத்தைப் பிரகடனப்படுத்தி சைக்கிள் ஓட்டுபவர்களை ஊக்கப்படுத்தும் நாடுதான் ஸ்பெய்ன்.
* சீனர்கள் ஆரோக்கியமாகவும் இளமையாகவும் இருப்பதற்கு வழியமைக்கும் காரணிகளில் ஒன்றாக சைக்கிள் ஓட்டும் பழக்கமும் திகழ்கின்றது. அங்கு சைக்கிள் ஓட்டுவதற்கென தனியான பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.
* சைக்கிளை வாடகைக்கு எடுத்து ஊரையே சுற்றிப்பார்க்கின்ற வசதி பிரான்ஸில் இருக்கின்றது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் சைக்கிள் ஓட்டிகளை ஊக்கப்படுத்தவும் என இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
* தொழிலுக்குச் செல்கின்றவர்களில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் சைக்கிள்களில் செல்வதை டென்மார்க்கில் காணலாம்.
* சைக்கிளை அழகாக அலங்கரித்து, அதில் ஊரின் மூலை முடுக்குகள் எல்லாம் சுற்றி வரும் மக்களை அவுஸ்திரேலியாவில் காணலாம்.
* பந்தயத்துக்காகவும் ஊரைச் சுற்றவும் சைக்கிளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை ஜேர்மனியில் அதிகரித்து வருகிறது.
* 'சைக்லோவியா' என்ற பெயரில், சைக்கிள் திருவிழா கொலம்பியாவில் நடைபெறுகின்றது.
* அழகான சாலைகள், சிறப்பான சுற்றுச்சூழல் என சைக்கிள் சுற்றுலாவுக்கே பெயர் போன இடம் நோர்வே. அதனாலேயே, சைக்கிள் ஓட்டிகளுக்கு மிகவும் பிடித்த இடமாக நோர்வே வர்ணிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய சந்ததியினருக்கான



## ஒக்டோபர் 01 சிறுவர் தினம்

**நாட்டின் எதிர்காலம் இன்றைய சிறுவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில், சிறுவர்களின் முக்கியத்துவத்தைக் கருதி அவர்களுக்கென விசேட தினமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவே உலக சிறுவர் தினமாகும்**

### சிறுவர்கள் என்போர்....

இலங்கையில் அமுலிலுள்ள சட்டதிட்டங்களின்படியும் ஐக்கிய நாடுகள் சிறுவர் பிரகடனத்தின்படியும் 18 வயதிற்குட்பட்ட, அனைவரும் சிறுவர்களாகக் கணிக்கப்படுகின்றனர்.

### சிறுவர்களைப் பற்றி பேசுவதற்கு ஒரு தினம்

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடெங்கிலும் 'உலக சிறுவர் தினம்' நொவெம்பர் மாதம் 20 ஆம் திகதியே அனுஷ்டிக்கப்படுகின்றது. எனினும், இலங்கையில் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியே சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதன்படி, ஐக்கிய நாடுகள் சபையானது 1954 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் உலக சிறுவர் தினத்தை அனுஷ்டித்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் (UNICEF) இத்தினத்தில் சிறுவர்களுக்கான நலன்புரி சேவைகளில் உலகளாவிய ரீதியில் ஈடுபடுகின்றது.

### இந்த ஆண்டின் தொனிப்பொருள்

'சிறுவர்களுக்கு மதிப்பளித்தல்' (Respect for Children) என்பது ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தினால் இவ்வாண்டுக்கென பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உலக சிறுவர் தின தொனிப்பொருளாகும்.

### ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பிரகடனம்

ஐக்கிய நாடுகள் சபையானது 1989 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 20 ஆம் திகதி அதன் பொதுச்சபைக் கூட்டத்தின் போது, சிறுவர் பாதுகாப்பு மற்றும் அவர்களின் முன்னேற்றம் தொடர்பாக சிறுவர் பிரகடனம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இக்கொள்கைப் பிரகடனத்தின் 54 ஆம் சரத்து சிறுவர்கள் குறித்து தெளிவாக விளக்கம் தருகின்றது. சிறுவர்களின் இருப்பு, சிறுவர்களின் பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் பங்களிப்பைச் செலுத்தவும் பங்குபற்றுவதற்குமான உரிமைகள் போன்ற விடயங்கள் அந்தக் கொள்கைப் பிரகடனத்தில் பிரதானமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.1991 இல் எமது நாடும் இந்த சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் கையொப்பமிட்டு அதனை ஏற்றுக்கொண்டது.



### இலங்கையில் சிறுவர்களுக்காக செயற்படும் நிறுவனங்கள்

இலங்கையில் சிறுவர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் அவர்களின் நலன்புரிச் செயற்பாடுகளுக்காகவும் செயற்படும் பிரதான அரச நிறுவனம் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சாகும். அந்த அமைச்சின்கீழ் 3 நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவையாவன;

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.
- சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம்.
- சிறுவர் செயலகம்.

மேற்குறித்த மூன்று நிறுவனங்களையும் தவிர,பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் செயற்பிரிவும் சிறுவர் பாதுகாப்பிற்காகச் செயற்படும் மற்றொரு பிரதான நிறுவனமாகும்.

### சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

சிறுவர்களுக்கான அடிப்படை உரிமைகள் மற்றும் தேவைகள் மறுக்கப்படுதலே 'சிறுவர் துஷ்பிரயோகம்' என அழைக்கப்படுகின்றது. சிறுவர் துஷ்பிரயோகமானது உடல்-உள ரீதியில் நடைபெறலாம்.

### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அந்நாள் ஜனாதிபதியான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் சிறுவர் பாதுகாப்புக் குறித்து ஜனாதிபதி செயலணி ஒன்று நிறுவப்பட்டது.பின்னர், 1998இல் 50ஆம் இலக்கச் சட்டத்தின்படி சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டது.

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல், துஷ்பிரயோகத்திற்கு இலக்கான சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு உரித்தான சட்டங்களை நடைமுறைப்படுத்தல், அவர்களின் நலன்புரி நடவடிக்கைகளைச் செயற்படுத்தல் போன்றன இதன் முக்கிய நோக்கமாகும்.

மேலும், சிறுவர் துஷ்பிரயோகத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சிறுவர்களுக்கு இருக்கும் உரிமைகள் குறித்தும் சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதற்குரிய முறை குறித்தும் சமூகத்திற்கு அறிவூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாகும்.உங்கள் பிரதேசத்திலுள்ள பாடசாலையிலோ அல்லது ஏதாவது ஒரு இடத்திலோ சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெறுவதாக நீங்கள் அறிந்தால், அதனை சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்க முடியும்.

முகவரி: தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 330, தலவத்துகொட வீதி, மாதிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர.

மின்னஞ்சல் - ncpa@childprotection.gov.lk

தொலைபேசி இல. 011 - 2778911-4



### சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம்

இத்திணைக்களம் 1956ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரதான செயற்பாடாக, இத்திணைக்களத்திடம் கையளிக்கப்படும் சிறுவர், இளைஞர், வயது வந்தோர் என அனைத்து வயது மட்டங்களிலும் உள்ள குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வளிப்பதாகும். அத்துடன், பல்வேறு குற்றச்செயல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் முகம் கொடுக்கும் சிறுவர்களைப் பாதுகாப்பதும் இத்திணைக்களத்தின் பொறுப்பாகும். ஏதாவது, ஒரு பிரதேசத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெற்றால், அதுகுறித்து சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் 011- 2853596 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் அல்லது சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம், இலக்கம் 150/A, எல்.எச்.பி.கட்டடம், நாவல வீதி, நுகேகொடை எனும் விலாசத்திற்கு எழுத்து மூலம் முறையிடலாம்.

### சிறுவர் செயலகம்

ஆரம்ப குழந்தைப் பருவமாகக் கருதப்படுகின்ற, பிறந்தது முதல் ஐந்து வயது வரையிலான பாலர்களின் நலன்புரிக்காக செயல்படும் நிறுவனமாக இது திகழ்கின்றது.



நண்பர்களுடன் மகிழ்வது சிறுவர் உரிமையாகும்



கருத்துக்களை வெளியிட, கேட்க சிறுவர்களுக்கு உரிமை உண்டு



கல்வி கற்பதும் ஆசிரியர்களை மதித்து நடப்பதும் சிறுவர்களின் கடமையாகும்



கல்வி கற்பத... வேலைகளுக்கு நே... சிறுவர்களின்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன தினம்

## பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் செயலகம்

சிறுவர் மற்றும் மகளிர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் அம்முறைப்பாடுகள் குறித்து சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடனும் 1991 ஆம் ஆண்டில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் செயலகம் ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை இலங்கையில் 38 பொலிஸ் தலைமையகங்களில் சிறுவர் மற்றும் மகளிர் செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எந்த மாகாணத்திலும் நிகழும் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து சிறுவர் மற்றும் மகளிர் செயலகத் தலைமையகத்தின் 011-2444444 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் செயலக தலைமையகம், இல.25, ஸ்ரீமத் பாரோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு - 01 என்ற முகவரிக்கு எழுத்து மூலமாகவோ முறையிடலாம். கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறுவர் மற்றும் மகளிர் செயலகம் அர்ப்பணிப்போடு செயல்படும்.

-இரஞ்சித் ஜெயகர்





[…ற்பதற்கும் ஏனைய …நேரத்தை ஒதுக்குவதும் …ளின் கடமையாகும்]



மதுபானம் மற்றும் புகைத்தலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வது சிறுவர்களின் உரிமை ஆகும்

# சர்வதேச முதியோர் தினம்





முதியோர்களைக் கௌரவிக்கும் பொருட்டும் அவர்கள் மீது அக்கறை செலுத்தவும் பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டு, அநாதரவாக வாழும் முதியோர்கள் மீது அன்பு காட்டி, அவர்களது தேவைகள், உரிமைகள், அவர்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் குறித்து சமூகத்தின் கவனம் திருப்பப்பட வேண்டும் எனும் பிரதான நோக்கங்களைக் கருத்தில் கொண்டே, ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது.எனினும், இத்தினத்தில் மாத்திரம் அவர்களில் அக்கறை செலுத்துவது, கௌரவிப்பது என்று மட்டுப்படுத்திக்கொள்வது பெருந்தவறாகும்.

## முதியோர்களின் முக்கியத்துவம்

'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' என நாம் அடிக்கடி கூறுவதுண்டு. அதன்படி, இன்றைய முதியோர்களும் ஒரு காலத்தில் சிறுவர்களாக இருந்தவர்கள்தான் என்பதை நாம் மறக்கலாகாது. அவர்கள் சமூகத்தில் நேற்றைய தலைவர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பதோடு, நம் வாழ்க்கைப் பாதையை செப்பனிட அவர்கள் பெரும் அர்ப்பணிப்போடு செயல்பட்டவர்களே.

ஒரு நாட்டின் முதியவர்களை நாம் 'மூத்த குடிகள்' அல்லது 'மூத்த பிரஜைகள்' என கௌரவத்தோடு அழைக்கின்றோம். அந்தவகையில், எமது நாட்டில் வசதிகள் குறைவாக இருப்பினும், வெளிநாடுகளில் முதியவர்களுக்கென பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். பொது போக்குவரத்துத்துறை, வைத்திய சாலைகள், அரச நிறுவனங்கள், வங்கிகள் என பல்வேறு துறைகளில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

## முதியோர்களை ஏன் கௌரவிக்க வேண்டும்?

இன்றைய முதியோர்கள் தம் நீண்ட வாழ்க்கைப் பாதையில் பல அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள். அவர்கள் கடந்து வந்த பாதை, கால ஓட்ட மாற்றங்கள், தாம் பெற்ற பல்வேறு அனுபவங்கள் என்பன எதிர்கால சமுதாயத்திற்கு சிறந்த பாடமாகும். எனவே, இன்றைய தலைமுறையினர் தாம் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையின்போதும், முதியோர்களின் அனுபவத்தைக் கேட்டு - ஆலோசனைகளை ஏற்று - அதனை தமது செயல் நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்வது பெரிதும் நன்மையளிக்கும்.



ஆனால், பெரும்பாலானோர் இதனைக் கடைப்பிடிப்பதில்லை. முதியோர்களின் ஆலோசனைகள் அனைத்தும் தற்காலத்திற்கு ஒவ்வாதவை என முற்றாக நிராகரிப்பவர்கள் பலர் நம்மில் இருக்கின்றனர். இதனைத் தவிர்த்து எல்லாத் தரப்பினரதும் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்று, மேற்கொள்ளும் எந்தவொரு செயலும் வெற்றிகரமாக நிறைவு பெறுவது காலத்தின் கண்கூடு. சிலவேளை, வயோதிபத் தன்மை காரணமாக அவர்களின் உடல், உள பலவீனங்கள் ஏற்படலாம். எனவே, அவற்றை உணர்ந்து நாம் அதற்கேற்றவகையில் நடந்து கொள்ள வேண்டும். இன்றைய இளைஞர்களும், சிறுவர்களும் முதியோர்களை மதித்து, அவர்களை கௌரவத்தோடு நடத்தினால்தான் அதனைப் பார்த்து எதிர்கால சமுதாயமும் அதன் வழியில் பெரியோரை மதித்து நடப்பது குறித்துக் கற்றுக்கொள்வார்கள்.



## முதியோர் இல்லங்கள்

இன்று எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் முதியோர் இல்லங்கள் அதிகரித்து வருகின்றன. சில தசாப்தங்களுக்கு முன்னர் முதியோர் இல்லங்களில் தமது உறவுகளைச் சேர்க்கும் பழக்கம் எம்மிடம் இருக்கவில்லை. அதனால், முதியோர் இல்லங்கள் மிக அரிதாகவே காணப்பட்டன. ஆனால், இன்று நிலைமை முறிலும் மாறுபட்டதாக இருக்கின்றது.

வயோதிப காலத்தில் தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அல்லது தமது உறவுகளுடன் அன்பைப் பொழிந்து அவர்களின் அரவணைப்பில் இன்பமாக வாழவே எந்தவொருவரும் விரும்புவர். ஆனால், பிள்ளைகளில் பலர் பெற்றோரைப் பராமரிக்கும் வசதிகள் தமக்கிருந்தும் தமது சொகுசு, சுதந்திரமான வாழ்க்கைக்காக வேண்டி, முதியோர்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகின்றனர். இதனால் தாம் தனிமைப்பட்டதாக உணர்ந்து உடல், உள ரீதியில் மேலும் பலவீனமடைகின்றனர். எனவே, இத்தகைய நிலைக்கு அவர்களை ஆளாக்காது இயன்றளவுக்கு அவர்களை நாமே பராமரிப்பது சாலச் சிறந்தது. நாம் முதியோர்களின் மனதைப் புரிந்து அவர்களை கௌரவித்து மரியாதை செலுத்துவதற்கு ஏற்பவே, எதிர்காலத்தில் எமது முதுமைப் பருவத்தில் நமது பிள்ளைகளும் நம் மீது அன்பும் மரியாதையும் செலுத்துவார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

(அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சனின் காவலன்

பூபாலன் பெரும் செல்வந்தன். ஆனால், மிகுந்த கஞ்சன். யாருக்கும் உதவ மாட்டான். தானும் வயிறார உண்ணமாட்டான். அத்துடன், வீட்டில் ஆங்காங்கே பணத்தைப் பதுக்கி வைத்திருந்தான். கொள்ளையர் வந்து பணத்தைத் திருடிவிட்டால் என்ன செய்வது என்று பயந்தான்.

காவலுக்கு ஆளை வைத்தால் அவனுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும். சாப்பாடு போட வேண்டும். அதற்குப் பணம் செலவாகி விடுமே என்ன செய்வது என்று யோசித்தான்.

ஒருநாள் அவன் வீதியில் சென்றபோது, ஓரிடத்தில் கூட்டமாகப் பலர் இருப்பதைக் கண்டான். அங்கே சென்று பார்த்தபோது, ஒரு குரங்காட்டி, குரங்கை வைத்து வித்தை காட்டிக்கொண்டிருந்தான். குரங்காட்டி சொல்வதையெல்லாம் அது செய்தது. உடனே பூபாலனுக்கு ஒரு எண்ணம் உதித்தது. வித்தை முடிந்து எல்லோரும் சென்றதும் குரங்காட்டியை நெருங்கி, "தம்பி இந்தக் குரங்கு எதைச் சொன்னாலும் செய்யுமா?" என்று கேட்டான். "சொல்லிக் கொடுத்துவிட்டால் செய்யும்" என்றான் குரங்காட்டி. "என் வீட்டுக்கு ஒரு காவலாளி தேவை. இந்தக் குரங்கை நீ எனக்கு விற்று விடு. நீ வேறு குரங்கைப் பழக்கி வித்தைக்காட்டு" என்றான்.

குரங்காட்டியும் சம்மதித்து குரங்குக்கு ஆயிரம் ரூபா கேட்டான். பூபாலன் பேரம் பேசி ஐநூறு ரூபாவுக்கு குரங்கை வாங்கிக்கொண்டான்.சந்தோஷப்பட்டுக் குரங்குடன் வீட்டுக்குத் திரும்பினான்.

அதன் கையில் ஒரு கத்தியைக் கொடுத்து, "யார் உள்ளே நுழைந்தாலும் வெட்டிவிடு" என்று உத்தரவிட்டான்.



குரங்கும் தலையாட்டியது. பூபாலன் உள்ளே சென்று படுத்துக்கொண்டான். சற்று நேரத்தில் ஓர் ஈ பறந்து வந்தது. குரங்கு உடனே கத்தியை வீசியது. ஆனால், ஈ தப்பித்து உள்ளே சென்றது. குரங்கு விடாமல் விரட்டிச் சென்றது. பறந்து சென்ற ஈ, பூபாலனின் மூக்கின் மீது அமர்ந்து கொண்டது. குரங்கு பாய்ந்து சென்று கத்தியால் ஈயை வெட்ட முயன்றது. ஈ பறந்துவிட, பூபாலனின் மூக்கு வெட்டப்பட்டது. "ஆ! அம்மா..." என்று அலறியவாறு எழுந்தான் பூபாலன். மூக்கைப் பிடித்தவாறு வைத்தியரிடம் ஓடினான். கட்டுப் போட்டுக்கொண்டு திரும்பியவன், "முட்டாள் குரங்கே! ஏன் இப்படிச் செய்தாய்? இனி யாராவது உள்ளே நுழைந்தால் மட்டும் வெட்டு" என்று கூறினான்.

அடுத்த நாள், பூபாலனின் நண்பன் வந்தான். அவன் வாசலில் கால் வைத்ததும் குரங்கு கத்தியுடன் பாய்ந்தது. நண்பன் பயந்து போய் ஓட்டம் பிடித்தான். இதை மாடி மீது இருந்து பார்த்தான் பூபாலன். உடனே கீழே வந்து "அறிவுகெட்ட குரங்கே! என் ஆருயிர் நண்பனை இப்படி விரட்டி விட்டாயே. நான் போய்ச் சமாதானம் செய்கிறேன். இனிமேல் நான் சொல்லாமல் இந்த இடத்தை விட்டு அசையக் கூடாது" என்று கூறிவிட்டுச் சென்றான். சிறிது நேரம் கழித்து நண்பனுடன் வீடு திரும்பினான் பூபாலன். வீட்டுக்கதவு திறந்திருந்தது. உள்ளே பெட்டியில் வைத்திருந்த பணம், நகை எல்லாம் காணாமல் போயிருந்தன. குரங்கோ இருந்த இடத்தை விட்டு அசையாமல் அமர்ந்திருந்தது.

"ஐயோ! என் பணமெல்லாம் போச்சே" என்று அழுதவன் கோபத்துடன் குரங்கை அடித்தான். "நண்பா ஏன் அதை அடிக்கிறாய்? அது ஐந்தறிவுள்ள மிருகம். நாம் என்ன சொல்கிறோமோ அதை மட்டும்தான் செய்யும். சுயமாக சிந்திக்கத் தெரியாது. ஒரு மனிதனைக் காவலுக்கு வைத்திருந்தால் இப்படி நடந்திருக்காது" என்றான் நண்பன். "உண்மைதான் நான் சேர்த்த செல்வமெல்லாம் என் கஞ்சத்தனத்தால் போச்சு. இனிமேல் இப்படி நடந்துகொள்ள மாட்டேன் என்றான் பூபாலன்.

எம்.என்.மப்ரினா,
தரம் - 8A,
புனித அந்தோனியார் ம.கல்.,
கண்டி.

# உலகை உலுக்கிய யுத்தம்





முதலாம் உலக மகா யுத்தம் நிகழ்ந்து மீண்டும் ஒரு பயங்கரம் நிகழ்ந்தது. அதுதான் இரண்டாம் உலக மகா யுத்தமாகும். இந்த யுத்தம் 1939 தொடக்கம் 1945ஆம் ஆண்டு வரை 6 வருட காலம் நடைபெற்றது.



இந்த யுத்தத்தில் இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா என்பன போரிட்டன. இவை 'நேச நாடுகள்' எனப்பட்டன. இவற்றுக்கு எதிராக ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் போரிட்டன. இவை 'அச்சு' நாடுகள் எனப்பட்டன.

ஆரம்பத்தில் இப்போரில் ஐக்கிய அமெரிக்கா ஈடுபடவில்லை. ஜேர்மனியும் இத்தாலியும் ஐரோப்பிய நாடுகளை வெற்றிகொண்டு செல்லும்போது ஜப்பான் குடியேற்ற நாடுகளை வெற்றிகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டது. இவ்வாறு அதன் முன்னேற்றத்திற்கு ஹவாய் தீவில் நிறுவப்பட்டிருந்த அமெரிக்காவின் 'பேர்ள்' துறைமுகம் பெரும் தடையாக அமைந்தது. எனவே, ஜப்பான் பேர்ள் துறைமுகத்தைக் குண்டு வீசித் தாக்கியது.இதனால், ஆத்திரமடைந்த ஐக்கிய அமெரிக்கா ஜப்பானுக்கு எதிரான போரில் ஈடுபட்டது.

ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களின் மீது அணுகுண்டு வீசித் தாக்குதல் நடத்தியது. இதனால், லட்சத்துக்கும் மேற்பட்டோர் மரணமடைய அதற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

அத்துடன், புற்றுநோய், அங்கவீனம் ஆகிய தலைமுறை நோய்களுக்கு இலக்காகியோர் தற்போது ஜப்பானில் வாழ்கின்றனர். 1945 செப்டெம்பர் 2 ஆம் திகதி 'மசூரி' எனும் யுத்தக்கப்பலில் வைத்து ஜப்பான் சரணடைவதாக கடிதம் ஒப்படைக்கப்பட்டது. அத்துடன், இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்தது.

எஸ்.பௌமியாஸ், தரம் - 9,
ரிதிதென்ன இக்ரஃ ம.வித்.,
மட்டக்களப்பு.

## மூத்தோர் மொழிந்தவை

* பணமும் புகழும் உண்மையான செல்வம் அல்ல. ஒழுக்கமே உண்மையான செல்வம்.
* அறிவை விட தைரியத்தினால் தான் பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.
* சிறிய மெழுகுவத்தி எவ்வளவு தூரம் ஒளியைப் பரப்புகின்றதோ, அதே போல் தீய செயற்பாடுகளில் ஒரு நல்ல செயல் நன்கு பிரகாசிக்கும்.
* அறிவாளியின் கரங்களில் உள்ள எழுதுகோலானது போர் வீரனின் வாளை விட மிகப் புனிதமானது.
* மனிதர்களிடம் நல்லெண்ணம் நிலவுகின்றபோது, இப்பூமியில் அமைதியும் சமாதானமும் நிலவும்.
* வாழ்க்கையில் உண்மையாகவே வெற்றி பெற வேண்டுமாயின், சுருக்கமாகப் பேசுங்கள். அதிகமாகச் செயலாற்றுங்கள்.

பாத்திமா சஸ்னா,
பேருவளை.

## விடுகதைகள்

1. கண்டது இருவர், எடுத்தது பத்துப்பேர், உண்டது ஒருவர். அவர்கள் யார்?
2. ஒரு பெரிய மரம், அதற்கு 12 கிளைகள், ஒவ்வொரு கிளையிலும் முப்பது இலைகள். அவை யாவை?
3. மகள் கண்ணடித்தாள், மகன் கூச்சல் போட்டான், அம்மா அழுதாள். அவர்கள் யாவர்?
4. பிறக்கும்போது நான்கு கால்; வளரும்போது இரண்டு கால்; வயதான போது மூன்று கால். அவர்கள் யார்?
5. வெண்மையான காட்டில் கறுப்பு விதை கொண்டு கையில் விதைப்பார். வாயால் அறுப்பார். அது என்ன?

### விடைகள்

1. கண்கள், கைவிரல்கள், வாய்
2. வருடம், மாதம், நாட்கள்
3. மின்னல், இடி, மழை
4. குழந்தை, வாலிபன், கிழவன்
5. காகிதம், மை, வாசித்தல்

எச்.எம்.அஸ்லம், தரம் - 9B,
மட்/ஓட்டமாவடி தே.பாட.,

# எனக்கு சிறகு இருந்தால்...

எனக்கு சிறகு இருந்திருந்தால்
இன்பமாக வாழ்ந்திடுவேன்
வண்ணச் சிறகை விரித்திடுவேன்
வானம் நோக்கிப் பறந்திடுவேன்

வண்ணக் கிளிபோல் மகிழ்வுடனே
வான் பரப்பில் வலம் வருவேன்
மலர்களின் மணத்தை நுகர்ந்திடுவேன்
மயிலின் ஆட்டம் பார்த்திடுவேன்

சோலைகள் நோக்கிச் சென்றிடுவேன்
சொகுசாய் பழங்கள் உண்டிடுவேன்
நாடுகள் பல கடந்திடுவேன்
நதிகள் பல கண்டிடுவேன்

எனக்கும் சிறகை படைத்துவிட
ஏனோ இறைவன் மறந்துவிட்டான்
என்று எண்ணி நான்தோறும்
ஏங்கி ஏங்கி வாழ்கின்றேன்!



எம்.எஸ்.எம்.அர்சத்,
தரம் - 9A, கெ.தே.பா.,
கெகுணகொல்ல.

# கொங்காலேகொட பண்டா

சுதந்திரப் போராட்டத்தின் பிரதான தளபதியாக இருந்த கொங்காலேகொட பண்டாவின் இயற் பெயர் டேவிட் அல்லது தாவீது என்பதாகும். அலுகெனிய பண்டா, கபுறுபஸ்தி பண்டலாகே டேவிட் தொன் புள்ளே வெதரால எனும் பெயர்களால் இவர் அழைக்கப்பட்டார். 1843 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவர் பதுளை பிரதேசத்தில் வாழ்ந்துள்ளார். நாட்டுப்பற்றுமிக்க மக்களுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடினார். எனவே, இவர் ஒரு தேசத்துரோகி என ஆங்கில ஆட்சியாளர்களால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தார்.

பேராட்டத் தலைவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் காரணமாக, ஏற்பட்ட பலவீனத்தைப் பயன்படுத்தி ஆங்கிலேயர்கள் 1848 நொவெம்பர் 14 ஆம் திகதி கொங்காலேகொட பண்டாவைக் கைது செய்தனர். இவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை தளர்த்தப்பட்டு 100 கசையடிகள் வழங்கப்பட்டு, 1849 ஜனவரி 1 ஆம் திகதி மலாக்காவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிகால உளவுத்துறை



**ஆதிகாலத்தில் நாட்டு நடப்புக்களை வேவு பார்க்க தொழில்நுட்ப வசதிகள் இருக்கவில்லை எனினும், அக்கால ஆட்சியாளர்கள் உளவுத்துறையில் சிறப்பாகவே செயற்பட்டிருக்கின்றனர். அதில் ஒரு வகையே ஒற்றர்களை அனுப்பி வைப்பதாகும். தமது ஆட்சியை மக்கள் எதிர்க்கின்றார்களா? என்பதை அறியவும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும் ஒற்றர்களை நியமித்திருந்தனர் என 'ஷுக்ரனிதிஷாரய' எனும் பண்டைய கிரந்தம் குறிப்பிடுகின்றது.**

அக்காலத்தில் பக்கத்து நாடு எதிரி நாடாகவும் அதற்கு அப்பாலுள்ள நாடு நட்பு நாடாகவும் கருதப்பட்டது. எனவே, எதிரி நாட்டோடு யுத்தம் புரிய நட்பு நாட்டின் உதவி ஒத்தாசைகளைப் பெற ஒற்றர்கள் அனுப்பப்பட்டனர். 'நண்பனின் எதிரி தனக்கும் எதிரி' எனும் கொள்கையே பண்டைய இந்திய உளவு முறையில் குறிப்பிடப்படுகின்றது. கவ்டில்யரின் 'அர்த்த சாஸ்திரத்தில்' இதற்கென நான்கு அத்தியாயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் 'சங்ஸ்ஷொத்பத்தி' என ஐவகைப் பிரிவினரும் 'சங்ச்சார' என நால்வகைப் பிரிவினரும் உள்ளனர்.









1. அரச விடயங்களுக்குள் நுழைந்து அரசுக்கு உளவு பார்ப்போர்.
2. வெளிநாடுகளில் வேவு பார்ப்போர்.
3. மாணவர் மத்தியில் இருந்து பணியாற்றுவோர்.
4. விவசாயிகள் மத்தியில் இருந்து உளவு பார்ப்போர் எனக் குறிப்பிடப்படும் இந்த நால்வகையினரும் 'சங்ச்சார' எனும் பிரிவுக்கு உட்பட்டவர்களாவர்.

1. உயர்குல ஒற்றர்கள்.
2. வர்த்தக, இயக்க ஒற்றர்கள்.
3. முனிவர் போல் வேடமணிவோர்.
4. அரச தண்டனைகளை நிறைவேற்றும் ஒற்றர்கள்.
5. அழகிய பெண் ஒற்றர்கள். இந்த ஐவகைப் பிரிவினரும் 'சங்ஸ்ஷொத்பத்தி' எனப்படுவர்.

அத்தோடு, ஒற்றர்களுக்குப் பயிற்சியளித்தல், அவர்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல் அறிவுரை வழங்குதல் ஆகியவை அவர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக பொறுப்புக்களாகும்.

முனிவரைப் போல் வேடமணிந்து கிராமங்கள் தோறும் சஞ்சரிக்கும் ஒற்றர்கள் கிராமத்து நடப்புகளை அரசுக்குத் தெரியப்படுத்தினர். அவர்கள் தவசீலர்களாக வாழ்ந்து மோட்சத்தை விரும்புவோர் என மக்களால் நம்பப்பட்டனர். ஆனால், அவர்கள் சாதாரண மக்களுடன் நெருங்கிப் பழகி மக்களின் அபிப்பிராயங்களை அரசுக்கு அறிவித்தனர்.

அக்காலத்தில் அரச தண்டனை நிறைவேற்றுவோருக்குச் சார்பாக அனுப்பப்பட்ட ஒற்றர்களும் இருந்தனர். இராஜ துரோகிகளை விஷமூட்டிக் கொல்வதற்கே அவர்கள் அனுப்பப்பட்டனர். அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் அபிப்பிராயங்களைத் திரட்டி அரசுக்கு அறிவிப்பதே, அவர்களின் கடமையாக இருந்தது.

அத்துடன், அழகிய பெண்களும் இத்துறையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் அமைச்சர்களோடும் உயர் அதிகாரிகளோடும் நெருங்கிப் பழகி விடயங்களை அறிந்து அரசுக்கு அறிவித்தனர். நாட்டுக்கு எதிரான சதியையும் கிளர்ச்சியையும் அரசு இதன்மூலம் அறிந்து அவற்றை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும். ஆக, ஒவ்வொரு நாட்டினதும் பாதுகாப்பிற்கு ஒற்றர் சேவையானது அன்றும் இன்றும் மிக மிக இன்றியமையாத சேவையாகவே இருந்து வருகின்றது.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

## புவியின் உயிராம் ஓசோனைப் பாதுகாப்போம்


வாயு மண்டலத்தில் காணப்படும் பெறுமதிமிக்க ஓசோன் படலம் மனிதன் உற்பத்தி செய்யும் சில ரசாயனப் பொருட்கள் காரணமாக தற்போது சிதைவுற ஆரம்பித்துள்ளது. இப்படலம் விரைவாகச் சிதைவுறுமாயின் சூரியனின் ஒளி நிழற்படையில் காணப்படும் உயிரிணங்களுக்கு மிக ஆபத்தான 'கழி ஊதாக் கதிர்கள்' பூமியை நோக்கி வரும். இந்தக் கதிர்கள் பூமியில் உள்ள உயிரினங்கள் மீதும் தாவரங்கள் மீதும் தாக்கங்களை ஏற்படுத்தி பல்வேறுபட்ட சுற்றாடல், சுகாதார, சிக்கல்களை உருவாக்கும். கண்ணில் வெள்ளைப் படலம் தோன்றுதல், தோல் புற்றுநோய் ஏற்படுதல், சுவாசக் கோளாறுகள், காலநிலை மாற்றங்கள், இயற்கை வளங்கள் அழிவுறுதல் போன்றன ஏற்படும். ஓசோன் படலம் சிதைவுறல் தொடர்ச்சியாக இடம்பெறும்பட்சத்தில் பூமியில் உயிரினங்கள் நிலைத்திருப்பதற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. இதன் காரணமாக, ஓசோன் படலத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ரசாயனப் பொருட்களின் உற்பத்தியைத் தடுப்பதற்கு இன்று முழு உலகும் கவனம் செலுத்தியுள்ளது. இவ்வாறு தடுப்பதன் மூலமே எமக்கு 'ஓசோன்' படலத்தைப் பாதுகாக்க முடியும்.

### ஓசோன் படை பற்றி மனிதன் அறிய வேண்டியவை என்ன?

✱ பிரபஞ்சத்தில் பூமி மாத்திரமே ஒரேயொரு உயிரினங்கள் வாழும் கோளமென நம்பப்படுகின்றது. பூமியின் மீது காணப்படும் உயிரிகளைப் பாதுகாக்கும் 'பாதுகாப்புப் படை'யாக ஓசோன் பூமியைச் சுற்றி உருவாக்கப்பட்டுள்ளது.



✱ ஓசோன் மூலக்கூறானது 3 ஒட்சிசன் ($O_2$) அணுக்களினால் ஆனது.




✱ ஓசோன் படையானது பூமியின் மேற்பரப்பிலிருந்து 10-50km உயரத்தில் உள்ள படை மண்டலத்தில் உருவாகின்றது.

✱ சூரியனிலிருந்து பூமிக்குப் பயணிக்கின்ற பல்வேறுபட்ட கதிர்களில் ஆபத்து விளைவிக்கக்கூடிய கழிஊதாக் கதிர்கள் (U.V) ஓசோன் படையினால் உறிஞ்சப்படுகின்றன. எனவே, ஓசோன் படையானது, இயற்கையான சூரியத்திரையாகச் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

**A.W.ரிஷாட்**




படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

பாடசாலை:..............................

வகுப்பு:..............................

திகதி:..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருதமுனையைச் சேர்ந்த சஹ்ரான்-ஜென்ஸியா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹமட் சஹ்ரான், 28.09.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



உடதலவின்ன, கலதெனியைச் சேர்ந்த ரஸீன்-ரிஹானா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.ரஸாட், 28.09.2010 அன்று தனது ஐந்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



இறத்தோட்டையைச் சேர்ந்த றில்வான்-பெறோஜ் தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் ஸாபித், 30.09.2010 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர், உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்து கின்றனர்.



இவ்வருட மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டியின் ஆரம்பப்பிரிவு 'பாவோதல்' போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவி எஸ்.அப்லாவுக்கு ஆரம்பப் பிரிவு அதிபர் அப்துல் றசூல் வெற்றிப் பதக்கம் சூட்டுவதையும் சிரேஷ்ட ஆசிரியை ஜனுன் ஜாரியா வெற்றிச் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## கைவண்ணங்கள்



எஃப்.பஸ்ரினா, தரம் - 5, தல்துவை மு.ம.வித்., தல்துவை.



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ச.டெலக்சனா, தரம் - 8A, வேம்படி ம.உயர்தரப் பாட., யாழ்ப்பாணம்.



என்.ரிஸ்மா, தரம் - 3G, அல்-பாஸியத்துல் நஸ்ரியா மு.ம.ம.வித்., பேருவளை.




எம்.ரிழ்வான், தரம் - 10B, முஸ்லிம் மத்.கல்., குருத்தலாவ.



டீ.சிராஸ்பானு, தரம் - 6, கொட்டம்பபிடிய மு.மத்.கல்., ஹெட்டிபொள.



எஃப்.ஸப்னா, தரம் - 1A, வெ.அல்-அஸ்ஹர் மு.ம.வித்., திருகோணமலை.



எம்.கீர்த்தனா, தரம் - 9G, அல்-அக்ஸா மு.ம.வித்., இரத்தினபுரி.



எஃப்.பஸ்ஹா, தரம் - 6D, உளுக்காப்பள்ளம் மு.ம.வித்., ஹுசைனியாபுரம்.



கி.அட்சரா, தரம் - 4, களுதாவளை ம.வித்., மட்டக்களப்பு.



திவாஷினி, தரம் - 9C, கிங்ஸ்டன் சர்வதேச கல்., முகத்துவாரம்.



பஹ்மிதா நாஸிஹ், தரம் - 9, அல்-அஸ்ஹர் மு.ம.வித்., ஹெம்மாதகம.

எஸ்.டாவின், தரம் - 7, றோ.க.த.வித்., நாவற்காடு.




## ஓவியம் வரைவோம் - 18

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

**கடந்த இதழில் நாம் மூக்கின் அமைவிடம், தோற்றம் என்பன குறித்து நோக்கினோம். இந்த இதழில் நமது முகத்தில் கண்ணின் அமைவிடம், தோற்றம் என்பனவற்றை நோக்குவோம்.**

### பயிற்சி

* முகத்தில் கண்கள் அமைய வேண்டிய பகுதி படம் A யில் காட்டப்பட்டுள்ளது.
* 'V' என்ற ஆங்கில எழுத்தை சரிவாக > < என்ற அமைப்புகளைப் பயன்படுத்திக் கண்களை வரையலாம். படம் B யை அவதானியுங்கள்.
* இரு கண்களுக்கிடையில் உள்ள தூரம் ஒரு கண்ணின் (நாம் வரையும்) அளவாகும்.
* C எனக் குறிப்பிடப்பட்டுள்ள படங்களில் கண்ணின் பல்வேறு தோற்றங்கள் வரையப்பட்டுள்ள முறையைக் கவனியுங்கள்.
* D எனக் குறிக்கப்பட்டுள்ள படங்களில் அண்ணாந்து பார்க்கும் கண்கள், கீழ் நோக்கிய கண்கள், மூடப்பட்ட கண்கள் என பல்வேறு நிலைகளில் கண்களின் அமைப்புக்கள் காட்டப்பட்டுள்ளன.
* E எனும் படம் அச்சத்தை ஏற்படுத்தும் கண்களைச் சித்தரிக்கின்றது. அத்துடன், சிலரின் கண்கள் சாதாரண கண்களை விட, பெரியதாக அமைந்திருக்கும். கண்களின் மூலம் அச்சம், பயங்கரம், துக்கம், வேதனை, மகிழ்ச்சி என பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுதந்திரமாக வாழ்வதில் சுகம்

"அடி சொகுசுக்காரி! குளிர் அடித்து வெண்பனி பெய்யுமே அப்போது என்ன செய்வாயாம்?'' கனேரிப் பறவையிடம் காகம் கேட்டது.

காகத்துக்கு எரிச்சல்கூட மண்டிற்று. மழையையும் காற்றையும் குளிரையும் தாங்க முடியாத இது எந்த வகையில் உண்மையான பறவை ஆகும்? இப்படி இருந்தால் உலகத்தில் பிழைக்க முடியாதே. இந்தக் கனேரிப் பறவை உண்மையில் பறவை தானா? என்று அது மறுபடி சந்தேகப்படத் தொடங்கிற்று. இது பறவை என்று வெறுமே நடிக்கிறது போலிருக்கிறது....

"நிஜமாகவே நான் அசல் பறவைதான். அத்தை!'' என்று கண்ணீர் மல்க உறுதிப் படுத்திற்று கனேரி. "ஆனால் எனக்குக் குளிர்ந்து விறைக்கிறது.



"அதுதானே கேட்டேன்! நீ பறவையாக வெறுமே நடிக்கிறாயோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது''

"இல்லை. மெய்யாகவே நான் நடிக்கவில்லை அத்தை''

ஒருநாள் காலையில் கனேரிப் பறவை காகத்தின் கூட்டிலிருந்து வெளியே பார்த்தபோது ஒரு துயரக் காட்சியைக்கண்டு திடுக்கிட்டது. விடிவதற்குள் தரை வெண்பனியால் போர்த்தப்பட்டிருந்தது. சுற்றுமுற்றும் ஒரே வெள்ளையாக இருந்தது. முக்கியமாக, கனேரிப் பறவையின் இரையான எல்லாத் தானிய மணிகளையும் வெண்பனி மூடிவிட்டது. அசோக மரத்தில் பழங்கள் இருந்தன. ஆனால், அவை புளித்ததால் கனேரிப் பறவையால் அவைகளைத் தின்ன முடியவில்லை. காகமோ அசோக மரத்தில் உட்கார்ந்து பழத்தைக்கொத்தி, "ஆகா அருமையான பழம்!'' என்று மெச்சிற்று.

இரண்டொரு நாட்கள் பட்டினி கிடந்த பின்பு கனேரிப் பறவை ஒரேயடியாகச் சோர்ந்து போயிற்று. மேலே என்ன நடக்கும்? இப்படி இருந்தால் பட்டினியால் சாகக்கூட நேரிடலாம். கனேரிப் பறவை உட்கார்ந்து துயரத்தில் ஆழ்ந்திருந்தது. அப்போது சில பள்ளிச் சிறுவர்களைக் கண்டது. காகத்தின் மேல் கல் எறிந்த அதே மாணவர்கள். அவர்கள் தோட்டத்துக்கு ஓடிவந்து, தரையில் வலையை விரித்து, ருசியான அந்த விதைகளைத் தூவி விட்டு ஓடிப்போய் விட்டார்கள். விரித்த வலையைப் பார்த்த கனேரிப் பறவை மிகுந்த மகிழ்ச்சி அடைந்தது. "இந்தப் பையன்கள் கெட்டவர்களே அல்ல அத்தை. பையன்கள் எனக்கு இரை கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்றது.

"நல்ல இரைதான் போ! அதில் மூக்கை நுழைக்கலாம் என்று மட்டும் எண்ணவே எண்ணாதே! நீ ஆளி விதைகளைக் கொத்தத் தொடங்கியதும் வலையில் சிக்கிக் கொள்வாய்'' என்று எச்சரித்தது காகம்.

"அப்புறம் என்ன நடக்கும்?''

"அப்புறம் மறுபடியும் கூண்டில் அடைபடுவாய்''

கனேரிப் பறவை சிந்தனையில் ஆழ்ந்தது. அதற்குப் பசிக்கவும் செய்தது, மறுபடி கூண்டில் அடைபடவும் மனம் இல்லை. என்னதான் குளிரும் பட்டினியுமாக இருந்தாலும் சுதந்திரமாக வெளியே வாழ்வது எவ்வளவோ மேல். கனேரிப் பறவை சில நாட்கள் பொறுத்துப் பார்த்தது. ஆனால், பட்டினி கிடப்பது விளையாட்டு அல்லவே. இரைக்கு ஆசைப்பட்டு அது வலையில் மாட்டிக்கொண்டது.

"ஐயோ காப்பாற்றுங்கள்! இனிமேல் இப்படிச் செய்யவே மாட்டேன். மறுபடி கூண்டில் அடைபடுவதை விடப் பட்டினி கிடந்து சாவதே மேல்'' என்று பரிதாபமாகக் கீச்சிட்டது. அதனுடைய நல்ல காலம். அந்தப் பக்கமாகப் பறந்து வந்த காகம் கனேரிப் பறவையின் நிலையைக் கண்டு கொண்டது.

"அடி அசடே! இந்த இரையைத் தொடாதே, தொடாதே என்று எத்தனை தடவை சொல்லி இருந்தேன்'' என்று சிடுசிடுத்தது.

காகம் சரியான நேரத்தில் வந்ததால் அகப்பட்ட பறவையை சிறுவர்கள் பிடிப்பதற்குமுன் காகம் அந்த வலையை அறுத்துவிடவே, கனேரிப் பறவை மறுபடி விடுபட்டு விட்டது. பாழும் காக்கையைச் சிறுவர்கள் வெகுநேரம் விரட்டித் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். கழிகளையும் கற்களையும் அதன்மேல் வீசி எறிந்தார்கள். அதைத் திட்டினார்கள்.

மறுபடி கூட்டை அடைந்த கனேரிப் பறவை, "ஆகா இது எவ்வளவு நன்றாக இருக்கிறது'' என்று மகிழ்ந்தது.

"அதெல்லாம் சரிதான். ஆனால், நீ மட்டும் எச்சரிக்கையாக இரு'' என்று முணுமுணுத்தது காகம்.

கனேரிப் பறவை மறுபடியும் காகத்தின் கூட்டில் வாழத் தொடங்கிற்று. குளிரையோ, பட்டினியையோ பற்றி அது மேற்கொண்டு குறை சொல்லவில்லை. ஒரு தடவை காகம் இரை தேடப்போய், இரவை வயலில் கழித்துவிட்டு கூடு திரும்பியபோது,கனேரிப் பறவை அதிக குளிரினால் கூட்டில் இறந்து கிடந்தது. காகம் தலையைச் சாய்த்துப் பார்த்துவிட்டுக் கண்ணீருடன் சொல்லிற்று; "அதுதான் நான் சொன்னேனே, இது உண்மையான பறவை இல்லை என்று!'' கூடவே, இறந்து கிடந்த அந்தக் கனேரிப் பறவையின் உடலை நீண்ட நேரம் காகம் விரக்தியுடன் பார்த்துக்கொண்டே இருந்தது.

(முற்றும்)

*(அடுத்த இதழில் 'பொம்மை வான்காவின் பிறந்தநாள்')*

# உயர்ந்த குணம்

அந்த அடர்ந்த காட்டில் இன்பசாகரர் என்ற துறவி ஒருவர் ஆசிரமம் அமைத்துத் தன் சீடர்களோடு வாழ்ந்து வந்தார். சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அடிக்கடி இவரிடம் வந்து ஆசிபெற்றுச் செல்வது வழக்கம். இன்பசாகரர் வந்ததில் இருந்து அந்தப் பகுதியே அமைதிப் பூங்காவாகக் காட்சி தந்தது.

இன்பசாகரரிடம் இருந்த அமைதி, அடக்கம், பொறுமை, இனியபேச்சு போன்ற உயர்ந்த குணங்கள், அவரின் குருவிடம் அவருக்கு நன்மதிப்பைப் பெற்றுக் கொடுத்திருந்தன. அவரோடு ஒரு காலத்தில் மாமுனிவரான இன்பசாகரரின் குருவிடம் சீடராக இருந்தவர் கஜேந்திரர். ஆனால், இன்பசாகரருக்கு நேர் எதிரான குணங்களைக் கொண்டவர் அவர். புகழ், துறவிகளையும்விட்டு வைப்பதில்லை என்பதற்குக் கஜேந்திரர் ஒரு சான்று. இதனால், இன்பசாகரருடன் சண்டை போடுவதுடன், சீடர்களையும் தூண்டிவிட்டு குருவிடம் இன்பசாகரர் பற்றிய தவறான தகவல்களைப் பரப்புவது என துறவிகள் செய்யக்கூடாத காரியங்களில் ஈடுபட்டார் கஜேந்திரர். இதனால், அவரை ஆசிரமத்தை விட்டே விரட்டினார் குரு.

அன்று முதல் இன்று வரை இன்பசாகரரை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன், பக்கத்துக் காட்டில் ஆசிரமம் ஒன்றை அமைத்திருந்தார் கஜேந்திரர். பக்குவமில்லாத பலர், அவரிடம் சீடர்களாக இருந்தனர். இரண்டு காடுகளுக்கும் இடையே அழகான நீரோடை ஒன்று இருந்தது. அதில் இரண்டு காடுகளில் உள்ள துறவிகளும் விலங்குகளும் தங்களுடைய நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதுண்டு.

அன்றும் வழக்கம்போல நீராடி விட்டு சீடர்களோடு வந்துகொண்டிருந்த இன்பசாகரரைப் பார்த்த கஜேந்திரர், வேண்டுமென்றே அவரைச் சீண்டினார்.

"எலி மூஞ்சுக் குருவே வணக்கம். இந்தச் சீடர்கள்தான் உங்கள் எலிக்குஞ்சுகளா?''



"விநாயகருக்கு வாகனமாக இருப்பதே எலிதானே? அந்தப் பெருமை மிக்கவர்கள் எனக்குச் சீடர்களாக இருப்பது எனக்குப் பெருமைதானே?'' என்று அமைதியாகச் சொன்னார் இன்பசாகரர்.

சிறிதுகூட கோபப்படாமல், தன் கேலிப்பேச்சை தனக்கே அவமானப்படும்படி அவர் பேசியதைக் கேட்டுக் கோபமானார் கஜேந்திரர்.

"புத்திசாலித்தனமாகப் பேசுவதாக நினைப்போ? முட்டாளே, இந்த எலிக்குஞ்சுகளை என் சீடப்பூனைகள் கொன்றுவிடும். மரியாதையாகச் சொல்கிறேன். ஆசிரமத்தைக் காலி செய்துவிட்டு ஓடிவிடு. இல்லாவிட்டால், என் பலத்தால் நீ சாம்பலாகி விடுவாய்! என்னைத்தவிர, இன்னொருவன் புகழ்பெற நான் அனுமதிக்க மாட்டேன்'' என்று கத்தினார் கஜேந்திரர்.

கஜேந்திரரின் இந்தப் பேச்சு இரண்டு துறவிகளின் சீடர்களுக்கும் இடையே கைகலப்பாக மாறியது. ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டனர்.

"நிறுத்துங்கள். இன்னா செய்தாருக்கும் இனியவை செய்யும் என் சீடர்கள், வன்முறையில் இறங்கலாமா? துறவிகள் முதலில் துறக்க வேண்டியவை புகழ், ஆசை, வன்மம் ஆகிய மூன்றையும்தான். மனிதர்களுக்கு மட்டுமே உரியவை அவை. நம் போன்ற துறவிகளுக்கு அது தேவையில்லை. துறவிகளின் வேலை மற்றவர்களுக்கு வழி காட்டுவதுதான். நானும் அதைத்தான் செய்கிறேனே தவிர, உமக்குப் போட்டியாக இருக்க நான் வரவில்லை. இனியாவது நண்பர்களாக இருப்போம்'' என்று கஜேந்திரரின் காலில் விழுந்தார் இன்பசாகரர்.

கொஞ்சம்கூட இதை எதிர்பார்க்காத கஜேந்திரர் அதிர்ந்து போனார். "பகைவனைத் தன் காலில் விழச் செய்து மன்னிப்பது உலக வழக்கம். தவறே செய்யாத நீங்கள் என் காலில் விழுந்து என்னைத் திருத்தி விட்டீர்கள். தாயின் காலில்தான் மகன் விழவேண்டும். மகன் காலில் தாய் விழுவது பாவம்'' என்று இன்பசாகரரின் காலில் விழுந்து கதறினார் கஜேந்திரர். அன்றிலிருந்து தனது தீய குணங்களைத் துறந்து நற்குணமுடைய துறவியாக மாறினார் கஜேந்திரர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாம் கமலுக்கும் ராஜாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

කමල්: රාජා, ඔයා අද හවස අපේ ගෙදර එනවද?
ராஜா, ஒயா அத ஹவஸ அபே கெதற எனவத?
கமல்: ராஜா, நீங்கள் இன்று பின்னேரம் எங்கள் வீட்டிற்கு வருவீர்களா?

රාජා: ඇයි කමල්?
எய் கமல்?
ராஜா: ஏன் கமல்?



කමල්: සවස අපි සරුංගල් යවමු.
சவச அபி சருங்கல் யவமு.
கமல்: நாங்கள் பின்னேரம் பட்டம் விடுவோம்.

රාජා: ඔයා සරුංගලයක් හැදුවද?
ஒயா சருங்கலயக் ஹெதுவத?
ராஜா: நீங்கள் பட்டமொன்று செய்தீர்களா?

කමල්: මම නෙවේ. අපේ අයියා ලොකු සරුංගලයක් හැදුවා.
අපි ඒක අරන් මුහුදු වෙරළට යනවා.
மம நெவெ. அபே அய்யா லொகு சருங்கலயக் ஹெதுவா.
அபி ஏக அரன் முஹுது வெரளட யனவா.
கமல்: நான் இல்லை. என்னுடைய அண்ணா ஒரு பெரிய பட்டம் செய்தார். நாங்கள் அதனை எடுத்துக்கொண்டு கடற்கரைக்குப் போகிறோம்.

රාජා: මුහුදු වෙරළට අපි විතරද යන්නේ?
முஹுது வெரளட அபி விதரத யன்னே?
ராஜா: கடற்கரைக்கு நாங்கள் மட்டுமா போகின்றோம்?

කමල්: නැහැ රාජා. අපේ අම්මයි තාත්තයි යනවා.
ඔයත් අම්මගෙන් අහල එන්න.
நெஹெ ராஜா. அபே அம்மய் தாத்தய் யனவா.
ஒயத் அம்மகென் அஹள என்ன.
கமல்: இல்லை ராஜா. எங்களுடைய அம்மாவும் அப்பாவும் போகிறார்கள். நீங்களும் அம்மாவிடம் கேட்டுக்கொண்டு வாருங்கள்.

රාජා: ඔයාලා කීයට විතරද යන්නේ?
ஒயாலா கீயட விதறத யன்னே?
ராஜா: நீங்கள் எத்தனை மணிக்குப் போகிறீர்கள்?



කමල්: අපි හවස හතරට විතර යනවා.
அபி ஹவச ஹதரட விதற யனவா.
கமல்: நாங்கள் பின்னேரம் நான்கு மணியளவில் போகிறோம்.

රාජා: හොඳයි කමල්, මම අම්මගෙන් අහල එන්නම්.
ஹொந்தய் கமல், மம அம்மகென் அஹள என்னம்.
ராஜா: நல்லது கமல், நான் அம்மாவிடம் கேட்டுக்கொண்டு வருகிறேன்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* ராஜா, இன்று பின்னேரம் எங்கள் வீட்டிற்கு வருவீர்களா?
රාජා, අද හවස අපේ ගෙදර එනවද?

i. என்னுடைய அண்ணா ஒரு பெரிய பட்டம் செய்தார்.
..............................................................................

ii. நாங்கள் கடற்கரைக்குப் போகிறோம்.
..............................................................................

iii. நான் அம்மாவிடம் கேட்டுக்கொண்டு வருகிறேன்.
..............................................................................






**Have been** மற்றும் **Has been** முதலான கூட்டு வினைச்சொற்களைக் (Compound Verb) கையாண்டு அமைக்கப்படும் நிகழ்கால வினைமுற்று வாக்கியங்கள் (Present Perfect Tense) சற்று வித்தியாசமான அர்த்தங்களைத் தருகின்றன. இத்தகைய வாக்கியங்களை விசேடமான பாவனைகள் (Special uses) எனக் கொள்ளலாம். தகுந்த உதாரணங்களின் மூலம் அவற்றை இங்கே கற்றுக்கொள்வோம்.

(அ) She has been in hospital since last Friday.
அவள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வைத்தியசாலையில் இருந்து வருகின்றாள்.

**குறிப்பு:** இங்கே, முழு வாக்கியத்தையும் காலவரையறையுடன் அவதானித்துக்கொண்டு 'has been' என்பதற்கு 'இருந்து வருகின்றாள்' என அர்த்தம் கொள்ள வேண்டும்.

(ஆ) She has been in hospital for the last two months.
அவள் கடந்த இரண்டு மாதங்களாக வைத்தியசாலையில் இருந்து வருகின்றாள்.

(இ) Ranjan has been ill for a long time.
ரஞ்ஜன் நீண்ட காலமாக சுகவீனமாக இருந்து வருகின்றான்.

(ஈ) You have been a politician in Sri Lanka for over 25 years.
நீ இலங்கையில் 25 வருடங்களுக்கும் மேலாக ஓர் அரசியல்வாதியாக இருந்து வருகிறாய்.

**விளக்கம்:** Have been மற்றும் Has been முதலான கூட்டு வினைச்சொற்களைக் கையாண்டு, 'கால வரையறையைக்' குறிப்பிடுகின்ற கருமங்களைத் தெரிவிக்கும் வாக்கியங்களையும் அமைக்கலாம்.

எடுத்துக்காட்டாக சொல்வதாயின், கடந்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் துவக்கப்பட்ட ஒரு கருமம், தற்சமயம் வரை தொடருமாயின், அவற்றையும் இந்த வாக்கிய வகைக்குள் உள்ளடக்கிக் கொள்ளலாம்.

**மேலும் ஒரு விளக்கம்:** கடந்த காலத்தில் இடம்பெற்ற ஒரு கருமத்தை, ஒரு தகவலாக (As an Information) தெரிவிக்கின்றபோதும் have been மற்றும் has been முதலான கூட்டு வினைச்சொற்களைக் கையாண்டு அமைக்கப்பட்ட நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். அத்தகைய சில வாக்கியங்களையும் இங்கே கற்றுக்கொள்வோம்.

(அ) They have been in India for three years.
மூன்று வருடங்களாக அவர்கள் இந்தியாவில் இருந்திருக்கின்றார்கள்.
('வசித்திருக்கின்றார்கள்' எனவும் அர்த்தம் கொள்ளலாம்)

(ஆ) They have been to India thrice.
மூன்று தடவைகள் அவர்கள் இந்தியாவுக்குப் போயிருக்கின்றனர்.

**குறிப்பு:** மேற்படி வாக்கியங்களில் முறையே கையாளப்பட்டுள்ள, 'in India' மற்றும் 'to India' முதலான உருபிடைச் சொற்றொடர்கள், இந்த இரண்டு வாக்கியங்களுக்கும் இடையில் காணப்படுகின்ற கருத்துக்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன என்பதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

(இ) You have been in Malaysia for two years.
நீ இரண்டு வருடங்களாக மலேசியாவில் இருந்திருக்கின்றாய்.

(ஈ) You have been in Malaysia for the last two years.
நீ கடந்த இரண்டு வருடங்களாக மலேசியாவில் இருந்து வருகின்றாய்.
('வசித்து வருகின்றாய்' எனவும் அர்த்தம் கொள்ளலாம்)

**குறிப்பு:** மேற்படி வாக்கியங்களில் கையாளப்பட்டுள்ள, 'For two years' என்ற சொற்றொடரும் 'For the last two years' என்ற சொற்றொடரும் வாக்கியங்களில் வெவ்வேறு அர்த்தங்களைத் தருகின்றன என்பதை நாம் முக்கியமாக அவதானிக்க வேண்டும்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

* முதன்முதலாக கிரிக்கெட் போட்டிகளில் ஈடுபட்ட நாடுகள் எவை?
  -இங்கிலாந்து, அவுஸ்திரேலியா



* முதலாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்ற ஆண்டு?
  -1975 ஆம் ஆண்டு



* 2007 ஆம் ஆண்டில் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் செம்பியனாகிய அணி எது?
  -அவுஸ்திரேலியா

ICC Cricket World Cup WEST INDIES 2007

* 2007 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற்றன?
  -மேற்கிந்திய தீவுகள்
* 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட்டில் எத்தனை நாடுகள் கலந்து கொண்டன?
  -16 நாடுகள்



* இலங்கை எந்த ஆண்டில் உலகக் கிண்ணத்தை வென்றது?
  -1996 ஆம் ஆண்டில்
* எந்த நாட்டில் வைத்து இலங்கை உலகக் கிண்ணத்தை வெற்றியீட்டியது?
  -பாகிஸ்தானில்
* அண்மையில் பெரிதும் பேசப்பட்ட எண்ணெய் அகழ்வுப் பரண் வெடிப்பானது எந்தப் பகுதியில் இடம்பெற்றது?
  -மெக்ஸிக்கோ கடற்பகுதியில்



* அவ்வாறு உடைப்பெடுத்த எண்ணெய் பரணின் பெயர் என்ன?
  -டீப் வோட்டர் ஹொரைசன்



* 2006 இல் உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் செம்பியனாகிய அணி எது?
  -இத்தாலி



* 2006 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற்றது?
  -ஜேர்மனியில்



* இந்த வருடம் (2010 இல்) உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற்றது?
  -தென் ஆபிரிக்கா
* இம்முறை 2010 உலகக் கிண்ண கால்பந்தாட்டத்தில் எத்தனை நாடுகள் போட்டியிட்டிருந்தன?
  -32 நாடுகள்



* ராமாயணத்தை எழுதியவர் யார்?
  -வால்மீகி



* இராமன்- சீதை ஆகியோரின் புதல்வர்களின் பெயர்கள் என்ன?
  -லவன், குசன்




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# சுவீடன் தேர்தலில் ஆளும்கட்சி வெற்றி





சுவீடனில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரதமர் ஃபெட்ரிக் ரொன்ஃபேல்ட்டினின் ஆளும் கட்சி வெற்றி பெற்றுள்ளது. எனினும், ஆட்சி அமைக்கும் அளவிற்குத் தேவையான பெரும்பான்மையை அக்கட்சி பெறாமையினால் உதிரிக்கட்சிகளின் ஆதரவுடனேயே, அக்கட்சி ஆட்சி அமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்படி, ஆளும் கட்சி 172 ஆசனங்களையும் பிரதான எதிர்க்கட்சி 156 ஆசனங்களையும் பெற்றுள்ளன. சுவீடன் நாடாளுமன்றத்தில் மொத்தம் 349 ஆசனங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'சிலி'யின் சுதந்திர தினம்



'சிலி'யில் கடந்த 18 ஆம் திகதியன்று கொண்டாடப்பட்ட அந்நாட்டின் சுதந்திர தினத்தை சுரங்க விபத்திற்கு ஆளாகியுள்ளவர்களும் குறித்த சுரங்கத்தில் இருந்தவாறு கொண்டாடியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிலியின் ஜனாதிபதி செபஸ்தியன் பினேரா முன்னர் குறிப்பிட்டதன்படி, சுதந்திர தினத்திற்கு முன்னர் குறிப்பிட்ட சுரங்கத் தொழிலாளர்கள் மீட்கப்படுவார்கள் என்று அறிவித்திருந்தார். எனினும், அது தற்போது கடுமையான பணியாக இருப்பதனால் எதிர்வரும் நொவெம்பர், டிசம்பர் மாதமளவிலேயே இவர்களை மீட்டெடுப்பது சாத்தியப்படும் என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஜப்பானில் அமைச்சரவை மாற்றம்



ஜப்பானில் புதிய அமைச்சரவையொன்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமது தலைமைப் பதவிக்கு ஏற்பட்டிருந்த அச்சுறுத்தலிலிருந்து மீண்டு தொடர்ந்தும் பிரதமர் பதவியைத் தக்க வைத்துக்கொண்டுள்ள ஜப்பான் பிரதமர் நவோட்டோ கன் மேற்படி புதிய அமைச்சரவையை அறிவித்துள்ளார்.

ஜப்பானின் 'டெமோக்ரடிக்' கட்சியின் தலைவராக உள்ள நவோட்டோ கன்னுக்கு எதிராக அதே கட்சியில் இருக்கும் இவ்ரோ ஒஸாவாவினால் அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக, கட்சிக்குள் வாக்கெடுப்பொன்று நடைபெற்றது.

இதில் டெமோக்ரடிக் கட்சியின் 721 உறுப்பினர்களில் 491 பேரின் ஆதரவைப் பெற்று நவோட்டோ தொடர்ந்தும் தலைமைப் பதவியையும் பிரதமர் பதவியையும் தக்க வைத்துக்கொள்ள முடிந்தது. இதனையடுத்தே, அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நாவோட்டோ நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

## அற்லஸ் கேள்வி - 275

**கேள்வி:** சுவீடன் நாடாளுமன்றத்தில் எத்தனை ஆசனங்கள் (உறுப்பினர்கள்) உள்ளன?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 275,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 273 இன் சரியான விடை: எகிப்து**

பரிசு பெறுவோர்

சு.விமலேசன்,
129, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.

கபாலினி ஆனந்தசோதி,
கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

எஃப்.அஷ்ஷிபா,
794/13, சிலோன் வீதி, சாய்ந்தமருது-17.

# பேர்மியுடாவில் புயல்காற்று



பேர்மியுடா தீவுகளில் கடும் புயல் காற்று வீசியதில் பாரிய அனர்த்தங்கள் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'ஈகோர்' என்று பெயரிடப்பட்டுள்ள மேற்படி புயல்காற்றின் காரணமாக, மரங்கள் முறிந்து விழுந்ததுடன், வீதிப் போக்குவரத்திலும் பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டது. அத்துடன், மின்சார விநியோகமும் சீர்குலைந்ததுடன் இன்னும் சில இடங்களில் வெள்ள அனர்த்தங்களும் ஏற்பட்டன.

பேர்மியுடாவில் இதற்கு முன்னர் இவ்வாறான பாரிய புயல்காற்று ஏற்பட்டதில்லை என்று வானிலை அவதான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு-கிழக்கில் விளையாட்டுப் பயிற்சிகள்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எல்லே மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளை மேம்படுத்துவதற்கு விரைவு நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இளைஞர் விவகார அமைச்சின் ஊடாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அடுத்த வருடம் பிரதேச மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. எனவே, இதனை முன்னிட்டு இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள கிராம சேவகர் பிரிவுகளில் பணியாற்றுகின்ற விளையாட்டுத்துறை ஊழியர்களின்மூலம் குறித்த போட்டிகளில் இளைஞர், யுவதிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், தேசிய மட்டத்தில் தெரிவாகின்ற கழகங்களைச் சேர்ந்த போட்டியாளர்களுக்கு இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், தேசிய அணிகளில் விளையாடுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது.

# பொதுநலவாயப் போட்டிகள் திட்டமிட்டபடி நடைபெறும்



இம்முறை இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் (கொமன்வெல்த்) திட்டமிட்டபடி நடைபெறும் என்று இந்தியா அறிவித்துள்ளது.

ஒக்டோபர் 3 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ள மேற்படி போட்டிகள் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் டில்லி நகரில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்டிருந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக, தாய்வான் உல்லாசப் பிரயாணிகள் இரண்டு பேர் கொல்லப்பட்டிருந்தனர். இந்த சம்பவத்தையடுத்து கொமன்வெல்த் போட்டிகள் நடத்தப்படுமா? என்ற சந்தேகங்கள் எழுந்தன.



இதனையடுத்தே போட்டி திட்டமிட்டபடி நடைபெறும் என்று இந்தியா சார்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொமன்வெல்த் போட்டிகள்

- நடைபெறும் இடம் - டெல்லி (இந்தியா)
- நாடுகள் - 72 (பொதுநலவாய நாடுகள்)
- போட்டிகளின் எண்ணிக்கை - 260
- ஆரம்ப வைபவம் - ஒக்டோபர் 03
- இறுதி வைபவம் - ஒக்டோபர் 14
- பிரதான அரங்கம் - ஜவஹர்லால் நேரு அரங்கம்

# ஆஸிக்கு எதிரான போட்டியில் யுவராஜ் சிங் இல்லை



இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையே ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகின்ற டெஸ்ட் தொடரில் இந்திய அணியில் யுவராஜ் சிங் இடம்பெறவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்திய அணி அண்மையில் கலந்து கொண்ட டெஸ்ட் தொடரில் யுவராஜ் சிங் உரிய வகையில் பிரகாசிக்கவில்லை.

எனவேதான், இம்முறை அவுஸ்திரேலியாவுடனான போட்டிகளில் அவர் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையுடனான இறுதி டெஸ்ட் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படாத சகீர் கான், ஸ்ரீசாந்த், ஹர்பஜன் சிங், காம்பீர் ஆகியோர் ஆஸியுடனான போட்டிகளில் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளனர்.





இலங்கையுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சுகயீனம் காரணமாக, யுவராஜ் சிங் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அப்போது அவருக்குப் பதிலாக சுரேஷ் ரெய்னா அணியில் இடம் பெற்றிருந்ததுடன், அந்த வாய்ப்பினை அவர் நன்றாகவே பயன்படுத்தி நூறு ஓட்டங்களைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அணியில் இடம்பெறத் தவறியுள்ள யுவராஜ் சிங் இதுவரை 34 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 1,639 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவரது சராசரி 35.63 ஆகும்.

# "அதிசயம் இருக்காது; திருப்புமுனை இருக்கும்"

-ரிக்கி பொன்டிங்



இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டு ஐ.சி.சியின் தரப்படுத்தல் பட்டியலில் முதலாவது இடத்தைக் கைப்பற்றுவதே தமது குறிக்கோள் என்று அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற தேவை எமக்கு உள்ளபோதும் அதிசயம் எதனையும் நடத்த முடியாவிட்டாலும் இயன்ற வரையில் சிறப்பான திருப்புமுனைகளை ஏற்படுத்த முனைவோம். இக்களம் தனது சக வீரர்களின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர்களான ஷேன் வோர்ன், மெக்ராத், கில்கிறிஸ்ட், மெத்யூ ஹேடன், ஜஸ்டின் லெங்கர் ஆகியோரின் ஓய்வினையடுத்து பின்னடைவு நிலைக்கு ஆளாகியுள்ள ஆஸி அணியை பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டிய சூழ்நிலையில் பொன்டிங் இருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஐ.சி.சி டெஸ்ட் தரப்பட்டியல்

1. இந்தியா
2. தெ.ஆபிரிக்கா
3. இலங்கை
4. அவுஸ்திரேலியா
5. இங்கிலாந்து
6. பாகிஸ்தான்
7. மே.இ.தீவுகள்
8. நியூஸிலாந்து
9. பங்களாதேஷ்

## ஆசிய விளையாட்டுக்கள்;

# போட்டி ஏற்பாடுகள் தயார்!

நொவெம்பர் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் சீனா பூர்த்தி செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, 16ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளையொட்டி, விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கென 13 தொடர்மாடிக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த ஏற்பாடுகள் தற்போதுதான் பூர்த்தி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.





இதற்கென சிறப்பு விளையாட்டு நகரமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு மெய்வல்லுநர் போட்டிகளுக்கான களம், ஊடகத்துறையினருக்கான கிராமம், அணியின் பயிற்றுநர்கள் மற்றும் முகாமையாளர்கள் ஆகியோருக்கான சிறப்பிடங்கள் என்று பல்வேறு வடிவங்களில் பாரியதொரு நிலப்பரப்பில் சுமார் நாற்பதாயிரம் பேருக்கும் மேல் கொள்ளக்கூடிய வகையில் மேற்படி விளையாட்டு நகரம் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மிகப் பெரிய கிரகம்


வியாழனின் 4 பிரதான துணைக்கோள்கள் (மேலிருந்து கீழாக: அய்யோ, யுரோப்பா, கனிமீட், கெலிஸ்டோ)


பெரிய செம்புள்ளி



ஞாயிற்றுத்தொகுதிக் குரிய எட்டு கோள்களில் மிகப் பெரிய கிரகம் வியாழன் (Jupiter) ஆகும். இது எமது புவியைவிட 1,317 கன அளவு பெரியது. இதன் விட்டம் 143,516 கி.மீற்றராகும். ஞாயிற்றுத் தொகுதியிலேயே நிறைமிகுந்த கோளும் இதுவே. இது ஒருமுறை சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலம் 11.86 வருடங்களாகும். மஞ்சள் நிறம் கலந்த இளம் பச்சை நிற ஒளியை உடைய வியாழக் கிரகத்தின் மேற்பரப்பில் பல இருள் வலயங்கள் காணப்படுகின்றன. அத்தோடு, தென்பகுதியில் செம்புள்ளி (Red Spot) என அழைக்கப்படும் பரந்த பிரதேசம் ஒன்றும் காணப்படுகின்றது.

இந்த செம்புள்ளி சம்பந்தமாக 1968 இல் அமெரிக்காவின் 'ஏம்ஸ்' ஆய்வுகூடத்தில் சேவையாற்றிய இலங்கையரான கலாநிதி சிரில் பொன்னம்பெரும வுடன் பீட்ஸ் சுலர் என்ற விஞ்ஞானியும் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளின் படி, வியாழனில் உயிரின தோற்றத்திற்கு உதவும் அமினோ அமிலம் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. வியாழக் கிரகத்தின் வளிமண்டலம் விசேடமாக ஐதரசன் மற்றும் ஹீலியம் ஆகியவற்றால் உருவாக்கப் பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

வியாழனில் காணக்கூடிய மேகங்களின் நாடா மற்றும் சுற்றுச்சூழல் பிரதேசங்கள் பச்சை, சிவப்பு, மண் நிறங் களால் ஆனவை. வியாழ னுக்கு உறுதிப்படுத்தப்பட்ட 63 துணைக்கோள்கள் உள்ளன. இவற்றில் மிகவும் பிரபலமான அய்யோ, யுரோப்பா, கனிமீட், கெலிஸ்டோ ஆகிய நான்கு துணைக் கோள்களும் 1610 ஆம் ஆண்டில் கலிலியோ கலிலியால் கண்டுபிடிக்கப் பட்டன.

வியாழன் குறித்து விஞ்ஞான ரீதியிலான தகவல்களை வெளியிடுவதில் அமெரிக்க விண்ணோடங்களான பயனியர் 10 மற்றும் பயனியர் 11 ஆகியனவும் வொயேஜர் 1 மற்றும் வொயேஜர் 2 ஆகிய தன்னியக்க விண்கலங்களும் பெரும் பங்காற்றியுள்ளன. கிரகங்களில் அதிகளவுஈர்ப்பு விசையைக்கொண்ட கிரகம் வியாழன் என்பதும் குறிப்பிடத்தக்கது.


வியாழன் மற்றும் புவியின் அளவுகள்

# செவ்வாய்க் கிடங்கில் உறைந்த நீர்த்தட்டு



செவ்வாயில் மறைந்திருக்கும் கிடங் கொன்றில் உறைந்த நீர்த்தட்டு இருப்பதை அண்மையில் நாஸா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். செவ்வாய்க் கிரகத்தின் ஓடுபாதை யில் தரித்து நிற்கும் ஆய்வுக்கலத்தில் உள்ள 'ஹைரைஸ்' எனும் கெமராவில் இருந்து பெறப் பட்ட புகைப்படங்களை ஆய்வு செய்தபோதே, இந்த நீர்த்தட்டினைக் கண்டுபிடிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது.

# விண்வெளிச் சுற்றுலா நனவாகிறது...!


வோர்ஜின் கெலக்டிக் டூ விண்கலம்


மற்றுமொரு வோர்ஜின் கெலக்டிக் விண்கலம்

விண்வெளியில் வினோதமாகப் பயணிக்க வேண்டும் என நீங்கள் கனவு கண்டிருக்கலாம். அக்கனவு நனவாகும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பது இப்போது உறுதியாகிவிட்டது. இதற்கமைய, விண்வெளிக்குச் சுற்றுலா செல்வதற்கான ஏற்பாடுகள் தற்போதளவில் நடைபெற்று வருகின்றன. பிரித்தானிய கோடீஸ்வரரான சேர்.ரிச்சர்ட் ப்ரேன்சன் என்பவரின் வோர்ஜின் கெலக்டிக் (Virgin Galactic) நிறுவனமே விண்வெளி சுற்றுலாவுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

விண்வெளிச் சுற்றுலாவுக்காக தயாரிக்கப்பட்ட குறித்த விண்கலன்கள் மூன்று மாதங்களாகப் பரீட்சார்த்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக் கின்றன. இந்நிறுவனத்தினூடாக, விண்வெளிச் சுற்றுலா செல்ல விரும்பும் ஒருவர் 140,000 பவுண் அதாவது, இலங்கை நாணயப்படி 25,000,000 ரூபா செலவழித்து இப்பயணத்தை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

1961 முதல் இன்றுவரை சுமார் 500 பேர் விண்வெளிக்குச் சென்று வந்துள்ளனர். ஆனால், வோர்ஜின் கெலக்டிக் நிறுவனமானது வருடமொன்றிற்கு 500 பேரை விண்வெளிக்கு அனுப்ப உத்தேசித் துள்ளது.

இந்த நிறுவனம் இதற்கென 5 விண்கலங்களைத் தயாரிக்கும் பணியில் இறங்கியுள்ளது. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் நாளொன்றிற்கு மூன்று விண்வெளிச் சுற்றுலாக் களை மேற்கொள்வதற்கு அவர்கள் உத்தேசித் துள்ளனர்.

அப்பலோ விண்வெளி வீரர்கள் சந்திரனுக்குக் கொண்டுசென்ற ரொக்கெட்டுகளில் பாவித்த நைதரசன் மற்றும் மண்ணெண்ணெய் கலந்த எரிபொருள் விரைவாக எரியும் தன்மைகொண்டது. இதனால், வோர்ஜின் கெலக்டிக் நிறுவனம் விண்வெளிச் சுற்றுலாவின்போது மிகப் பாதுகாப்பான எரிபொருளை பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதனை உற்பத்தி செய்ய றப்பரும் மீள் பயன்படுத்தக்கூடிய நைலோனையும் உபயோகித்துள்ளது. விண் சுற்றுலாவில் ஈடுபடவுள்ள 'வைட் நைட் டூ' எனும் விண்கலமானது 17 தொன் நிறையும் விண்வெளியில் 50,000 அடி உயரத்திற்குச் செல்லும் திறனும் கொண்டது. இதுவே உலகின் மிகச் சக்தி வாய்ந்த விமானமாகக் கருதப்படுகின்றது. அமெரிக்க அரசின் அனுசரணையோடு இந்த விண்வெளிச் சுற்றுலா 2012 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



வோர்ஜின் மாதிரி விண் கலத்துடன் ரிச்சார்ட் ப்ரேன்சன்


வோர்ஜின் கெலக்டிக் விண்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாசங்களில் X அடையாளமிடுக

1






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.10.06 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 280**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## பொருத்தமான விடையில் கோடிடுக

1. மனிதன் முதன்முதலில் பயன்படுத்திய தானியம்;
   (கோதுமை/ நெல்)
2. ஐஃபள் கோபுரத்தை நிர்மாணித்தவர்;
   (அலெக்ஸாண்டர் குஸ்டவ் ஐஃபள்/ ஐஃபள் மேன்)
3. ஒக்சிஜனைக் கண்டறிந்தவர்;
   (ஜோசப் மைக்கல்/ ஜோசப் ப்ரீஸ்ட்லி)
4. 'காய்கறிகளின் அரசி' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் மரக்கறி;
   (லீக்ஸ்/ கெரட்)

4

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 277 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
சி. பவிதா, 60, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

**போட்டி: 02**
எம். ருக்ஷான், 86/1, மல்கமன்தெனிய, அலவத்துகொட.

**போட்டி: 03**
அ. யோசுவா,
42, பாடசாலை வீதி, நாவற்கேணி, மட்டக்களப்பு.

**போட்டி: 04**
கி. பானுசன், 620/13, தர்மபுரம், கிளிநொச்சி.

**போட்டி: 05**
எஃப். இஷ்பா, 05, கோட்டகொட, வெலிகம.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எம். அசாம், சாய்ந்தமருது - 17.
- சையித் ஹுசைன், அக்குறனை.
- ஆர். விஜோக்கா, மஸ்கெலியா.
- பா. மிதுர்ஷன், பெரிய நீலாவணை - 02.
- எஸ். சிவசங்கரி, தலவாக்கலை.
- க. துலக்ஷன், வவுனியா.
- யு. சன்ஜீவ், கட்டுகஸ்தொட.
- பாசில் சப்ரி, மொறட்டுவை.
- அ.ஜோன், மட்டக்களப்பு.
- ஸரஃப் ஸம்லி, கல்முனை.

## கணக்குப் புதிர்

5


ஒரு தாய் தனது 3 மகள்களுடன் கடை ஒன்றுக்குச் சென்று, அங்கிருந்து 9 முத்துக்களை வாங்கினார்.

1 ஆவது முத்து - ஒரு ரூபாய்
2 ஆவது முத்து - இரண்டு ரூபாய்
3 ஆவது முத்து - மூன்று ரூபாய்
4 ஆவது முத்து - நான்கு ரூபாய்
5 ஆவது முத்து - ஐந்து ரூபாய்
6 ஆவது முத்து - ஆறு ரூபாய்
7 ஆவது முத்து - ஏழு ரூபாய்
8 ஆவது முத்து - எட்டு ரூபாய்
9 ஆவது முத்து - ஒன்பது ரூபாய் என்ற ரீதியில் முத்துக்களின் விலைகள் அமைந்திருந்தன.

தற்போது அந்த 9 முத்துக்களையும் அந்த தாய் தனது மூன்று மகள்களுக்கும் சம எண்ணிக்கையில் சம பெறுமதியுடையதாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஆக, 9 முத்துக்களினதும் மொத்த விலையைக் கணக்கிட்டு அவற்றை எவ்வாறு பிரித்துக் கொடுக்கலாம் என்பதைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.


## இடைவெளிகளை நிரப்புக

2




## சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக

3




## அறிவுக்கு விருந்து 277 விடைகள்

**போட்டி: 01**
*1. மெக்சிகோ* *2. சீனா* *3. இலங்கை*

**போட்டி :02**
- turkey
- pie
- pumpkin
- corn
- pilgrims
- harvest

**போட்டி: 03**



**போட்டி: 04**
- A - 12
- B - 14
- C - 11
- D - 16
- E - 13
- F - 7

**போட்டி: 05**
*1. 2005, 345, 119, 87, 63*
*2. 403, 218.5, 218, 94, 26*




**உ**ன்னில் பிரசுரமாகும் அனைத்தும் என்னை மிகவும் கவர்ந்தவை. அவற்றில் 'இராமாயணம்', 'கதைகள்', 'கல்வி முகாமைத்துவம்', 'சங்கிலி மன்னன் வரலாறு' என்பன குறிப்பிடத்தக்கவை.

**-ர. சாருஷன், தரம் - 9, மு/புதுக்குடியிருப்பு மத்.கல்., புதுக்குடியிருப்பு.**

**ஒ**வ்வொரு புதனும் 'விஜய்' தாங்கி வருகின்ற ஆக்கங்கள் அனைத்தும் சிறப்பானதாகவும் மாணவர்களாகிய எமக்குப் பயன் தரக் கூடியதாகவும் அமைகின்றன. 'சங்கிலி மன்னன் வரலாறு', 'விளையாட்டுத் தகவல்கள்', 'ஜப்பானின் கல்விமுறை', 'பணம் அறிமுகமான வரலாறு' என்பன மிகவும் பயனுடைய தாக அமைந்தன. இதேபோல், இனிவரும் காலங்களிலும் சிறந்த ஆக்கங்களைப் படைக்க என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**-ந.சிந்துபைரதி, வீரசிங்கம் ம.வித், மீசாலை.**

**நீ** சுமந்து வருகின்ற அத்தனை விடயங்களும் சூப்பர். குறிப்பாக, 'இயற்கை அதிசயங்கள்', விண்வெளித் தகவல்கள்', 'விளையாட்டுத் தகவல்கள்', 'குள்ளமான மனிதர்' போன்றன என்னை வெகுவாகக் கவர்ந்தன. விளையாட்டுத் தகவல்களில் 'மெட்ச் ஃபிக்ஸிங் - ஸ்பொட் ஃபிக்ஸிங்' என்பவற்றைப் பற்றி தெளிவாக அறிந்துகொண்டேன்.

**-எஃப். சாஜிதா, தரம் - 13 (இணை கணிதம்), சாஹிராக் கல்., கம்பளை.**




**த**ரம் 10 இல் கல்வி கற்கும் எமக்கு 'பணம் அறிமுகமான வரலாறு' உட்பட, பிரசுரமான அனைத்துத் தகவல்களும் பெரிதும் உதவின. எனினும், உன்னிடம் ஓர் அன்பான வேண்டுகோள்...! உயர் தரம், புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாதிரி வினாக்களை வழங்குவது போல், சாதாரண தரத்துக்கு ஆயத்தமாகும் எமக்கும் மாதிரி வினாக்களை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தரம் - 10 மாணவிகள், களு/வியாங்கல்லை மு.ம.வித்., வியாங்கல்லை.**

**'இ**ராமாயணம்', 'சங்கிலி மன்னன் வரலாறு', 'வாரம் ஒரு நாடு', 'இயற்கை அதிசயங்கள்', 'பணத்தின் அறிமுகம்' போன்றவை உட்பட, ஏனைய ஆக்கங்களும் கல்விக்குத் துணை புரிகின்றன. பல்வேறு பயன்தரும் விடயங்களுடன் தொடர்ந்து எம்மை நாடி வருவாய் என எதிர்பார்க்கின்றேன்.

**-பா.செல்வபாலன், தரம்-11, கிளி/பளை மத்.கல்., பளை.**

**'வி**ஜய்' தாங்கி வருகின்ற ஒவ்வொரு விடயமும் எமது அறிவை வளர்க்கக்கூடியதாக இருப்பதோடு, வாசிக்கத் தூண்டுவதாகவும் இருக்கின்றது.

**-எம்.ஆர்.இனாஸ், கபுவத்த, வெலிகம.**

**'சி**ன்னமுத்துவும் கொப்புளிப்பானும்' எனும் ஆக்கத்தை வாசித்து அந்த நோய்கள் பற்றி பூரண விளக்கத்தைப் பெற்றுக்கொண்டேன். கனினித் தகவல்கள் உட்பட, ஏனைய ஆக்கங்களும் சிறப்பானவையே.

**-ஜெ.அகிலாஷ், கண்டி வீதி, சுமேதகம.**

**உ**ன்னில் வெளிவரும் தகவல்களும் அவை தொடர்பான படங்களும் பாடசாலையில் எமக்கு வழங்கப்படுகின்ற ஒப்படைகளைத் திறம்படச் செய்வதற்கு மிகவும் உதவிபுரிகின்றன. உனது அறிவுப்பயணம் தொடர என் இனிய வாழ்த்துக்கள்.

**-வை.கலைச்செல்வி, கொழும்பு வீதி, அப்புத்தளை.**

**இந்த இதழில் (29.09.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 06.10.2010.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



வாசகர் மடல்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கிலியின் நாட்டுப்பற்றுக்கு முன்னால் தம்மால் எதுவும் செய்ய இயலாதிருப்பதாகவும் அவன் தன் அரச நிலத்திலும் சரி, தன் அயல் அரசுகளிலும் சரி எம் ஆதிக்கத்தை நிலைநிறுத்தத் தடையாக இருப்பதாகவும் அவனை எவ்வாறாவது பணிய வைக்க வேண்டும் என்றும் பறங்கியரின் சபையில் கருத்து ஒன்று முன்வைக்கப்பட்டது*

# பறங்கியரின் சதித்திட்டம்






தூய உள்ளமும் நாட்டுப்பற்றும் மிக்க வீரனாக சங்கிலி மன்னன் விளங்கினான். அவனது சிறப்பைப் பொறுக்காத அவன் இரத்தவழி வந்த பரநிருபசிங்கன் தன் தீய செயற்பாட்டை சங்கிலி மன்னனுக்கு எதிராகத் தொடர்ந்தும் செய்தவண்ணமே இருந்தான். அவனுக்குப் பக்கபலமாக அப்பா முதலியான அவன் தாய்மாமனும், ஊர்காவற்றுறையின் சிற்றரசன் காக்கைவன்னியனும் இருந்தார்கள். '

மன்னாரில் படுதோல்வி அடைந்த பறங்கியர்கள் ஒன்றுகூடி சங்கிலி மன்னனைத் தோற்கடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். சங்கிலியின் நாட்டுப்பற்றுக்கு முன்னால் தம்மால் எதுவும் செய்ய முடியாதிருப்பதாகவும் அவன் தன் அரச நிலத்திலும் சரி, தன் அயல் அரசுகளிலும் சரி எம் ஆதிக்கத்தை நிலைநிறுத்தத் தடையாக இருப்பதாகவும் அவனை எவ்வாறாவது பணிய வைக்க வேண்டும் என்றும் பறங்கியரின் சபையில் கருத்து ஒன்று முன்வைக்கப்பட்டது.

அப்போது மன்னாரில் சங்கிலியால் தோற்கடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட அல்போன்சா எழுந்து "அந்தச் சங்கிலி மன்னன் தற்போது மாயாதுன்னைக்கு உதவி செய்கிறான். ஆனால், கோட்டை அரசை தன் பெறாமகனிடம் இருந்து பறித்தெடுப்பதே மாயாதுன்னையின் திட்டம். அதுமட்டுமன்றி, கண்டி அரசோடும் கூட்டு வைத்துள்ளான்.அவனிருக்கும் வரை எமது நோக்கத்தை நிறைவேற்ற முடியாது. மண் பிடிக்க எதிர்க்கிறான். மதம் பரப்பத் தடுக்கிறான். கப்பலோடு கடலில் நின்றால் வரி கேட்கிறான். தரையில் நாம் நடமாடினாலும் வரி அறவிடுகிறான். ஈழ நாட்டிலுள்ள அனைத்துக் காவலர்களையும் எமக்கு எதிராகச் செயற்படத் தூண்டுகிறான். அவனோ மாவீரன். அவனை வெற்றிகொள்ள எம்மால் இயலாது. எனினும், இவனை முறியடிக்க என்னிடம் ஒரு சதித்திட்டம் இருக்கிறது. அதை நாம் செயற்படுத்தினால் அவனை ஒழித்துவிடலாம்'' என்றான் அல்போன்சா.

"சதித்திட்டமா? என்ன அது?" அதனை முழுமையாகக் கூறு'' எனக் கேட்டான் சபைக்குத் தலைமை தாங்கிய அதிகாரி.

அல்போன்சா அந்த அதிகாரியைப் பார்த்து, "சங்கிலியை மறைமுகமாகப் பழிவாங்கத் துடிக்கும் அவன் உறவினனான பரநிருபசிங்கனையும் அப்பாமுதலியையும் எம் நட்பாளன் காக்கை வன்னியனையும் நாங்கள் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஆசைகாட்டி மன்னன் சங்கிலியை தோற்கடிக்க முயல வேண்டும். இதுவே என் யோசனை'' என்றான்.

"அல்போன்சா உன் திட்டம் சரியானதுதான். இத்திட்டத்தை வழிநடத்தும் ஆற்றல் பிரகன்சாவுக்கு அதிகமாக உண்டு. அவனை உடனடியாக ஊர்காவற்துறைக்கு அனுப்பி வைப்போம்'' எனக் கூறிய அந்த மேலதிகாரி தம் திட்டத்திற்கு அமைவாக பிரகன்சாவை ஊர்காவற்துறைக்கு அனுப்பி வைத்தான். பறங்கியர்களின் சதித்திட்டத்தின் வடிவத்தை பாதகனான பிரகன்சா தீயவனாம் காக்கைவன்னியனுக்கு எடுத்தோத, அந்தச் சதிகாரன் மிகவும் நுட்பமாகச் சிந்திக்கலானான். அப்போது, அவனின் சிந்தனையைக் கலைத்தது பிரகன்சாவின் குரல்.

"காக்கை வன்னியரே! என்ன யோசனை? எதுவாக இருந்தாலும் தயங்காமல் கூறும்'' என்றான்.

"நண்பரே! உங்கள் திட்டம் எனக்கு நன்கு புரிகிறது. அதனைச் செய்வதற்கு என்னால்தான் முடியும் என்பதும் எனக்குத் தெரிகிறது. சங்கிலியை அழிப்பதில் நான் உதவ வேண்டும் என்றால் யாழ்.அரசின் அரியாசனத்தில் நான் அமரவேண்டும். ஆனால், நான் சொன்ன இச்செய்தி அப்பாமுதலிக்கோ, அவன் மருமகன் பரநிருபசிங்கனுக்கோ தெரியாதிருக்க வேண்டும். அவர்களுக்கு ஆசைவார்த்தை காட்டி எமது திட்டத்திற்கு இசைய வைப்பது என்வேலை. இதற்கு என்ன? சொல்கிறீர்கள்?''

"சொல்வதற்கு என்ன இருக்கிறது நண்பரே! நீர் சொல்வதை ஏற்க நானும் என் அதிகாரிகளும் தயாராகவே இருக்கிறோம். எமக்கு வியாபாரம் நடக்க வேண்டும். எம்மதம் இம்மண்ணில் பரவ வேண்டும். அதற்கு உம் உதவி வேண்டும்'' என நயவஞ்சகச் சிரிப்போடு கூறினான் பிரகன்சா. "நல்லது நண்பரே நான் கூறும் திட்டத்தைக் கவனமாகக் கேளும்'' என தன் சதித்திட்டத்தைக் கூறத் தொடங்கினான் காக்கைவன்னியன்.

*பறங்கியர்களின் சதித்திட்டத்தின் வடிவத்தை பாதகனான பிரகன்சா அந்தத் தீயவனாம் காக்கைவன்னிக்கு எடுத்தோத, அந்தச் சதிகாரன் மிகவும் நுட்பமாகச் சிந்திக்கலானான். அப்போது, அவனின் சிந்தனையைக் கலைத்தது பிரகன்சாவின் குரல்*

(தொடரும்....)



# தேனீக்கள் அழிவால் பாரிய பாதிப்பு

தேனீக்கள் அழிவு உலகில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது. தேனீக்கள் அருகி வருவதால், தாவரங்களில் மகரந்தச் சேர்க்கை குறைந்து, உலகில் உணவு உற்பத்தியில் பெரும் பாதிப்பு ஏற்படுமென கெனடாவின் டொரன்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் ஜேம்ஸ் தோமஸ் கவலை தெரிவித்துள்ளார். இவர் பாறைகள் நிறைந்த மலைப்பகுதிகளில் 17 ஆண்டு காலம் தேனீக்கள் தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்த ஆராய்ச்சியை அடுத்து இவர், "பிரிட்டனில் தேனீக்கள் பாரிய அளவில் குறைவடைந்து, தாவரங்களில் மகரந்தச் சேர்க்கை 50 சதவீதம் குறைந்துள்ளதாகவும் இது ஏனைய நாடுகளுக்கும் ஓர் எச்சரிக்கை'' என்றும் கூறியுள்ளார்.

மகரந்தச் சேர்க்கை குறைவடைந்தால் அது பயிர்ச்செய்கையை வெகுவாகப் பாதிக்கும் வண்ணத்துப்பூச்சி போன்ற ஏனைய ஜந்துக்களும் மகரந்தச் சேர்க்கையில் ஈடுபட்டாலும் தேனீக்களே பெருமளவில் மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடுகின்றன. அதனாலேயே தேனீக்களின் அழிவு பயிர்ச்செய்கையை வெகுவாகப் பாதிக்கும் எனக் கூறப்படுகிறது. நாம் உண்ணும் உணவு தேனீக்களின் மகரந்தச் சேர்க்கையினால் உருவானது. ஆதலால் தேனீக்களின் அழிவைத் தடுத்து,அவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதானது காலத்தின் அவசிய, அவசரத் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான கறுப்புப் பெட்டியின் கண்டுபிடிப்பாளர் வோரன் மரணம்



விமான விபத்துக்கள் நடைபெற்றவுடன், குறித்த விமான விபத்துக்கள் எவ்வாறு ஏற்பட்டன என்பதைக் கண்டறிவதற்கு 'கறுப்புப் பெட்டி' எனும் உபகரணம் பயன்படுகின்றது.

இத்தகைய சிறப்புமிக்க இந்தக் கறுப்புப் பெட்டியை டேவ் வோரன் என்பவரே கண்டுபிடித்தார். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இவர் தமது 85 ஆவது வயதில் சில தினங்களுக்கு முன்னர் மரணமடைந்தார்.





விமான விபத்து ஏற்பட்டுவிட்டால் விமானத்தின் கணிசமான பாகங்கள் சிதறியோ, அழிவடைந்தோ விடுவதுண்டு. இத்தகைய நிலையில் விபத்திற்கான காரணத்தைக் கண்டறிவதற்கான எந்தவொரு ஆதாரமும் கிடைப்பதில்லை. இதனை நிவர்த்தி செய்வதற்காக இக்கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டது.

உலகிலேயே முதலாவது ஜெட் எயார் லைனர் விமானம், 1953 ஆம் ஆண்டு விபத்துக்குள்ளானது. இந்த விபத்துக் குறித்த விசாரணைகளை மேற்கொண்டிருந்த குழுவில் இருந்தவர்தான் டேவ் வொரன். விமானமொன்று விபத்திற்குள்ளாகும் வேளையில் விமான ஓட்டியின் அறையினுள் இடம்பெற்ற உரையாடலை அறிய முடிந்தால் விபத்திற்கான காரணத்தைக் கண்டறியமுடியும் என்பதை டேவிட் வொரன் அப்போது உணர்ந்தார்.

இதுபற்றிய ஆய்வுகளில் ஈடுபட்ட அவர், 1956 ஆம் ஆண்டில் சிறியதொரு உபகரணமொன்றை உருவாக்கினார்; அப்போது அவர் அவுஸ்திரேலிய விமான ஆராய்ச்சி நிறுவனத்தில் ஒரு நிபுணராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். சிட்னி பல்கலைக்கழகத்தில் விமானத்துறையில் விசேட பட்டத்தையும் இவர் பெற்றவராவார். எனவே, இவரது சிந்தனையில் உதித்த குறித்த உபகரணமானது விமான விபத்து நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் நிகழ்கின்ற உரையாடல்கள் அனைத்தையும் சேகரித்து பதியப்படுகின்ற தன்மையைக் கொண்டதாக அமைந்திருந்தது.



விஞ்ஞான ரீதியில் விமானத் தகவல் ரெக்கோடர் (பதிவாக்கி) (FDR-Flight Data Recorder/CVR-Cockpit Voice Recorder) என்று அடையாளப் படுத்தப்படுகின்ற இந்த உபகரணம் பின்னர் கறுப்புப் பெட்டி (Black Box) என்று பெயரிடப்பட்டது. கறுப்புப் பெட்டி என்று இதனை அழைத்தாலும் இதன் வெளிப்புறத் தோற்றம் செம்மஞ்சள் நிறத்திலேயே காணப்படும்.

இக்கறுப்புப் பெட்டியானது, பீரங்கிக் குழலில் போட்டு 'கொங்றீட்' சுவரொன்றை நோக்கிச் சுட்டாலும் மேற்படி கறுப்புப் பெட்டிக்கு எந்தவொரு சேதமும் ஏற்படாத அளவிற்கு அது உறுதியாக உருவாக்கப்பட்டிருக்கின்றது.

இத்தனை உறுதி கொண்ட இந்தக் கறுப்புப் பெட்டியானது, விபத்து நடைபெற்றதன் பின்னர் விமான சிதைவுகளுக்குள்ளிருந்து கண்டெடுக்கப்படும்போது கறுப்பு நிறத்திலேயே காணப்படும்.

ஆரம்ப காலங்களில் இந்த கறுப்புப் பெட்டியில் விமான ஓட்டிகளின் உரையாடல்கள், விமானம் பயணித்த உயரம், வேகம், திசை, வானொலி சமிக்ஞைகள் ஆகிய அனைத்தும் ஒருவகை ஒலிப்பதிவுக் கருவியில் பதியப்பட்டன. ஆனால், தற்போது கணினி மயப்படுத்தப்பட்ட கருவிகள் இதில் இணைக்கப்பட்டு அவற்றின் உதவியுடன் குறித்த விபரங்கள் துல்லியமாகப் பதிவாகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்புமிக்க இந்தக் கறுப்புப் பெட்டியைக் கண்டுபிடித்ததன் பயனாக உலக அளவில் இதுவரை நடைபெற்றுள்ள ஏராளமான விமான விபத்துக்களுக்கான காரணங்களைக் கண்டறிய முடிந்துள்ளது. இத்தகைய சிறப்புமிக்க இந்தக் கறுப்புப் பெட்டியைக் கண்டுபிடித்த டேவ் வொரன் என்றும் எம் நினைவில் கொள்ளப்படவேண்டியவரே.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 29, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org